# பக்தி விஜயம்..



கார்த்திகை - மார்கழி : 2012
ரதம் : 01
வழி : 07

இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்

மாலை கவர்ந்த
கோதை ஆண்டாள்!

ஒளிவீசும் கார்த்திகை

திருவாசக அமுதம்

சுட்டு விரலுக்கு
சொர்க்கம் கிடைத்தது!

மாணவர்
பக்கங்கள்..

கிளிகள் பிரிந்தன
காவியம் பிறந்தது..

நாரதர் பட்ட பாடு!



பிள்ளையார் கதை
ஆரம்பம்...

புராணத்தில்
அரிய காட்சிகள்!

கோலம் போடுவீர்,
பெருமாளை கவர்வீர்

உள்ளே ...
வாசிப்பு இன்பமும்,
ஆன்மீகமும் !

நம்நாட்டு சஞ்சிகை!

## அழகுறு திருப்பாவையில் ஆண்டாள் அழைக்கிறாள்..


"அழகிய ஆபரணங்களை அணிந்த சிறு பெண்களே! செல்வம் மிகுந்த ஆயர்பாடியில் தொண்டும், கன்னிப்பருவத்தையும் உடையவர்களே! மாதங்களில் சிறந்த மார்கழி மாதத்தில், பௌர்ணமி நன்னாளில் கூர்மையான வேல் உடையவனும். பகைவர்களுக்கு கொடுமை செய்பவனுமாகிய நந்தகோபனுடைய குமாரனும், அழகு நிறைந்த கண்களையுடைய யசோதைக்கு இளஞ்சிங்கக்குட்டி போன்றவனும், கரிய மேகம் போன்ற மேனியையும், செந்தாமரை போன்ற கண்களையும், சூரியனைப் போன்ற பிரகாசமும், நிலவைப்போல குளிர்ந்த முகத்தையும் உடைய நாராயணன் நாம் விரும்பிய வரங்களைத் தந்து அருள்புரிவான். எனவே மங்கையர்காள்.. இந்த மார்கழி நோன்பில் கலந்துகொண்டு நீராட வாருங்கள்.."



## இசைக்காக பொற்பலகை ஈந்த பெருமான்..



'எருக்கத்தம் புலியூரில் தோன்றியவர் திருநீலகண்டர். பல இசை நுணுக்கங்களைக் கற்ற பாணர் இவர். யாழில் ஏழிசை மீட்டுவதில் வல்லவர். அத்தனையும் சிவபெருமான் புகழ் பாடும்இசையே! சிவத்தொண்டே மூச்சாக தலமெல்லாம் சென்று பாடினார். ஒருமுறை மதுரையிலே கோயில் பிரகாரத்தில் அமர்ந்து பாடியபோது தரையெல்லாம் தண்ணீர் வந்தது. யாழின் தந்திகள் ஈரத்தில் கசிந்து செயலிழந்தன. அவரின் இசை தடைப்பட்டது. ரசிக வேந்தனாகிய பெருமான் தோன்றி பாணருக்கு பொற்பலகை தந்தருளினார். அதில் அமர்ந்து பாடினார் திருநீலகண்டர். அதிலும், சம்பந்தருடன் பாடுவதென்றால் பாணருக்கு கொள்ளைப்பிரியம். இருவரும் சம காலத்தவர்கள் அல்லவா!..



மாதாந்தம் ' பக்தி விஜயம்.. ' உங்களின் வீடுதேடி வரவேண்டுமா?
சந்தாதாரர் ஆகுங்கள்!
0713861168, 0774335144,
0776649635, 0232250071
இலக்கங்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்யுங்கள்
எஸ்.பி.முத்து - கணக்கு இல. 941641, இலங்கை வங்கியில் சந்தாவை செலுத்தலாம்.
காசோலைகள், மணி ஓடர்கள் ஏற்கப்படுகின்றன.
இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் வாசகர்கள் சந்தாதாரர் ஆகும்படி வேண்டுகிறோம்.


எந்நாளும் இன்புற்றிருக்க.....





"தாயிற் சிறந்த கோயில் இல்லை"



# பக்தி விஜயம்..

100/=

இந்து சமூகத்தின்
ஆன்மீக எழுத்துப் பணியில் ..


இதழ் உருவாக்கம்,
கணனி வடிவமைப்பு,
நிர்வாக இயக்கம் :

**எஸ். பி. முத்து**
(பிரதம ஆசிரியர்)

அனுசரணை :

**வை. திருச்செல்வம்**


இந்த பக்திச் சஞ்சிகை
வெளிவரும் முகவரி :
555, புதுத்தெரு,
மன்னார்,
இலங்கை.

தொலைபேசி :
**071- 3861168**
**077- 4335144**
**023- 2250071**

மின்னஞ்சல் :
nenjame @ gmail.com


சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன. அவை என்றும் நன்றிக்குரியன..

பெரியோர்களும், சான்றோர்களும் குறை, நிறைகளை எடுத்தியம்புவதோடு, வாசகர்களும் சமயச் செய்திகள், ஆக்கங்கள், விமர்சனங்களை தந்து ஆதரிக்க வேண்டுகிறோம்..



# பிள்ளையார் கதை



சைவ மக்களால் முன்னெடுக்கப்படும் விநாயகர் விரதங்களுள் பிள்ளையார் கதையும் ஒன்று. கார்த்திகை மாத தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி திதி வரையுள்ள 21 நாட்களுக்கு இந்த விரதத்தை அனுட்டிப்பார்கள்.

பெருங்கதை விரதம், விநாயக சஷ்டிவிரதம் என்றும் இதனை அழைப்பர். இந்த நாட்களில் பிள்ளையாருக்கு திருமஞ்சன ஆராதனைகளை சிறப்பாக செய்வார்கள். 21 நாட்களும் 21 வகையான நைவேத்தியங்களை படைப்பார்கள்.

இந்நாட்களில் ஒரு பொழுது மட்டுமே உணவுண்டு, பிள்ளையார் கதையை சொல்லக்கேட்டு, தியான நிலையில் கூடுமான வரையில் கணபதி சிந்தையோடு இருத்தல் பெரும் புண்ணியம் தரும் ...

## இதுவே போதும் ..




சிவச்செல்வர்களுக்கு பணிவான வணக்கம். கடந்த இதழில் எழுத்துப்பிழைகள் சற்று மிகையாகவே இடம்பெற்று விட்டன. இதற்காக தங்களிடம் மிக தாழ்மையோடு மன்னிப்பு கோருகிறோம் ..

கூடிய அளவில் இதுபோன்ற தவறுகளை நீக்க முயற்சிக்கிறோம். இருந்தும், எழுத்துக்களில் ஏற்பட்ட சேதத்தை ஒதுக்கிவிட்டு கருத்துக்களை என்றும்போல இருகரம் நீட்டி வரவேற்றீர்கள். இத்தகைய பெருந்தன்மைக்கு நாம் நன்றி கூர்கிறோம்.

'பக்தி விஜயம் ..' வெளிவரத் தொடங்கிய பிறகு நிறைய சமயத் தகவல்களை அறிந்திருப்பதாக வாசகர்கள் தெரிவிக்கிறார்கள். இதனால் நாமும்கூட மகிழ்ச்சியடைகிறோம். கடும் பிரயத்தனங்களோடு தரப்படும் உழைப்பு வீண்போகவில்லை என்ற நிம்மதியும் கிடைக்கிறது. இதுவே போதும் ..

--அன்புடன் ஆசிரியர்

# அஸ்வமேதயாகம் என்றால் என்ன?..



தெய்வீக சந்தேகங்கள்

ஒரு மன்னன் தனது பலத்தை ஏனைய நாட்டு அரசர்களுக்கு காட்டும்பொருட்டு ஒரு குதிரையை அவிழ்த்துவிடுவான். அக்குதிரையை பின்தொடர்ந்து தனது சேனையை அனுப்புவான். பிற நாட்டு எல்லைகளையும், பிரதேசங்களையும் குதிரை தொடும்போது அந்த அரசர்கள் அடிபணிந்து கப்பம் செலுத்தவேண்டும். இல்லையேல் போர்புரிய வரவேண்டும்.

அஸ்வமேதயாகத்தை பராக்கிரமம் மிக்க அரசனொருவனே நடத்தமுடியும். தனது தேசத்தின் விஸ்தரிப்புக்கு அவனால் பக்கத்து தேசங்களுக்கு விடுக்கப்படுகின்ற ஷத்திரிய அறைகூவல் அது.

கம்பீரமான குதிரைக்கு யாகம் நடத்தி, அதன் நெற்றியில் ஒரு அறிவித்தலை கட்டிவிடுவார்கள். 'இக்குதிரை கால்வைக்கும் நாடுகள் எங்கள் அரசருக்கு உரித்தாகிறது. மறுப்பவர்கள் இதனை கட்டிவைத்து, போருக்கு வரவும் ..' என்று அதில் வாசகங்கள் எழுதப்பட்டிருக்கும் ..

***அவசரத்திற்கு ஒரு ஆரத்தி எடுப்பதென்றால் அந்நேரத்தில் குழம்பிவிடுகிறோம் .. அதுவும் மணமக்கள் வரும் நேரத்தில் .. சுலபமாக எப்படி சமாளிப்பது?***

அவசரத்துக்கு என்றால் பெரிதாக அலைந்து பொருட்கள் தேடவேண்டியதில்லை. சமய காரியத்திற்கு வேண்டிய முக்கிய பொருட்களே சுலபமாக கிடைப்பவைதான். பெரும் பொருட்செலவுகளில் நடத்துவது ஆடம்பரத்தை மட்டுமே காட்டும் ..

மஞ்சள், குங்குமம், வெற்றிலை, கற்பூரம், நீர் இவைகளே போதும். தண்ணீரால் சுழற்றி திருஷ்டி கழிக்கும்போது, அவர்மேல் படியும் அத்தனை கண்திருஷ்டியும் அகன்றுவிடும். இதனை நீர்வலம் விடுதல் என்று கூறுவர்.

திருமணம் முடிந்து வீட்டிற்கு வரும் புதுத் தம்பதிகளோடு திருஷ்டிகளும் இருக்கும். கூடவே காத்து, கருப்பு போன்ற தீவினைகளும் சேர்ந்திருக்கும். இவைகளை ஆரத்தி மூலமாக அகற்றிவிட்டே அவர்களை உள்ளே அழைக்க வேண்டும் ..

# அமாவாசை தினத்தில் வாசலில் கோலம் போடலாமா?

**தெய்வீக சந்தேகங்கள்..**


அமாவாசை, திதி என்று வருகின்ற நாட்களை அதிகமாக ஒதுக்க முயல்வதால் கீழே காணப்படுவது போன்ற கேள்விகள் எழுவதற்கு வாய்ப்பு வந்துவிடுகிறது ..

பிதுர்களுக்கு திதி கொடுப்பதாலும் சிலர் இந்த நாட்களை அசுபமான நாள் என்று கருதுகிறார்கள். அதனாலேயே திதியன்றும், அமாவாசையன்றும் வாசலில் கோலம் போடுவதை தவிர்க்கிறார்கள்.

அமாவாசை, வருஷ திதி, மகாளயபட்ஷம் ஆகிய நாட்களில் பிதுர் வழிபாடுகளில் முழுமையாக ஈடுபடவேண்டுமென்ற நோக்கமே கோலமிடுதல், தோரணம் கட்டுதல் போன்றவற்றை தவிர்க்க வைத்ததே தவிர, அவை அசுப நாட்கள் என்பதால் அல்ல.

இந்நாட்களில் முன்னோர்களின் ஆசியை முழுமையாகப் பெறும் தருணத்தில் மிதமான நிகழ்ச்சிகளை தவிர்ப்பதும் இதன் காரணமாம்.





**கோயில்களைப் போன்று வீட்டிலும் பஞ்சாமிர்தம் செய்து சுவாமிக்குப் படைக்கலாமா, அப்படியாயின் அதனை எப்படி செய்வது? ..**

கோயில்களில் அபிஷேகத்திற்காக பஞ்சாமிர்தம் செய்யப்படுகின்றன. அதன் பக்குவம் தனித்துவமானது. ஆயினும், தெய்வத்திற்கு அன்போடு நைவேத்தியமாக வீட்டிலும் தயாரித்து படையலாக தரலாம் ..

வாழைப்பழம், அப்பிள், மாதுளை, கொய்யா, பேரீட்சை, பன்னீர்திராட்சை ஆகிய பழங்களோடு நாட்டுச் சர்க்கரை, தேன், ஏலக்காய், நெய், கற்கண்டு இவையே தேவை.

வாழைப்பழத்தை தோலுரித்து சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு மசிக்கவும். சிறு துண்டுகளாக நறுக்கிய பேரீட்சைப்பழத்தையும் வாழைப்பழ மசியலில் போடவும். அதில் சர்க்கரை அல்லது வெல்லம் போட்டு கிளறவும். பின் அதனுடன் மாதுளை, நறுக்கிய கொய்யா, திராட்சை ஆகிய பழங்களுடன் கற்கண்டைச் சேர்த்து நன்றாகக் கிளறவும்.

அதில் தேன், நெய், ஏலக்காய்பொடி போட்டு கிளறவும். எவ்வளவுக்கு குழைவாக கிளறுவீர்களோ அவ்வளவுக்கு பஞ்சாமிர்தம் சுவையாக இருக்கும்.

# மார்கழித் திங்கள் அல்லவா..




## திருப்பாவை --

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவராகிய ஆண்டாள் பாடிய நூல் இது. இதில் முப்பது பாடல்கள் வருகின்றன. 'நாலாயிரத் திவ்விய பிரபந்தம்' என்ற நாமத்தில் வைணவ பக்தி நூல்களின் தொகுப்பு உள்ளது. இதில் 473 தொடக்கம் 503 வரையான பாடல்கள் இந்தத் திருப்பாவையாகும்.

## நெய் உண்ணோம், பாலருந்தோம் ..

கன்னிப்பெண்கள் பாவை நோன்பு நோற்று, விடியும் முன்பே துயிலெழுந்து, பிற பெண்களையும் அழைத்துக்கொண்டு நீராடச் செல்வர். பின் இறைவனைத் தொழுது மங்கல வாழ்வினை வரமாகப் பெறுவர். இதன் பின்னணியாக எழுந்ததே இந்த பாடல்.

இதனால் பாவைநோன்பு என்ற இந்த நிகழ்வில் திருப்பாவை என்னும் பாடல்கள் இம்மாதத்தில் எங்கும் கேட்கின்றன.

"""மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் பொதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வ சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய் .."

திருப்பாவையில் முச்சுவையும் தித்திக்கின்ற தமிழைக் காணலாம். கோதையின் விரதத்தில் தொனிக்கும் புனிதத்தையும் கண்டு வியக்கலாம் ..

நெய் உண்ணமாட்டோம், பால் அருந்த மாட்டோம் .., கண்ணுக்கு மையிட்டு, சிகை அலங்கரித்து மலர்சூட மாட்டோம் .. தீயதை கேட்காமலிருப்போம். பிட்சை வழங்குவோம், இறைதுதி செய்வோம் என்றெல்லாம் உறுதி ஏற்கும் விரதம் இது.

இப்பாடல்களால் உண்டாகும் பயன்கள் இயற்கைக்கு உறுதுணை புரிகின்றன ..

நாடு முழுவதும் மும்மாரி பொழியும், வயல்களில் நெற்கதிர்கள் ஓங்கி வளரும், அவற்றிடையே துள்ளும் கயல்மீன்களின் அழகோ பிரமிப்பூட்டும், பசுக்கள் நிறையப் பால் சுரக்கும், எங்கும் செல்வம் கொழிப்பதற்கான வளம் தெரியும். இப்பாடல்கள் அனைத்துமே இறைவனின் பெருமையை விளக்குவதோடு, கன்னியரை சீக்கிரமே துயிலெழுந்து தொண்டாற்றத் தூண்டுகிறது.

மார்கழி மாதத்தில் அனைத்து பெருமாள் கோயில்களிலும் சுப்ரபாதத்திற்குப் பதில் திருப்பாவை பாடப்படுகிறது. மாதவனுக்கு உகந்ததான மார்கழி மாதத்தில், காலைப்பொழுதில் இது இசைக்கப்படுகிறது. வைணவ சமய வழிபாட்டில் இரண்டறக் கலந்த ஒன்றாக திருப்பாவை விளங்குவது அதிவிஷேசமானதாகும். ஏனெனில், தமிழறியா அடியார்கள் கொண்ட வைணவ தலங்களிலும் மார்கழிமாதக் காலைப்பொழுதுகளில் திருப்பாவை இசைக்கப்படுவதும், அங்கே கோதை தனக்கென்று ஒரு தனிச்சந்நிதி கொண்டுள்ளதும் வேறு எங்கும் காணக்கிடைக்காத தனிச்சிறப்பாகும்.

# மார்கழியின் மகத்துவங்கள்

# ஆண்டாள்


## சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ..

பெரியாழ்வார் என்று நாமம்கொண்ட விஷ்ணு சித்தர் வாழ்ந்திருந்தார். பூப்பறித்து, மலர்மாலை தொடுத்து பெருமாளுக்கு சூட்டுவது இவரது நித்திய வேலை. தனது நந்தவனத்தில் துளசிச் செடிக்கருகில் ஒருநாள் மண்வெட்டியால் கொத்திக்கெண்டிருந்தார். அப்போது ஒரு அழகிய பெண்குழந்தை அவருக்குக் கிடைத்தது. அன்று கலி 98 வதான நள வருடம் ஆடிமாதம் சுக்ல பட்ஷ சதுர்த்தசியும், பூர நட்சத்திரமும் கூடிய நன்னாள் ஆகும்.கொள்ளைகொள்ளும் சிரிப்புடன் தவழ்ந்த அக்குழந்தையை தனது மகளாகவே கருதினார். கோதை என்று பெயரிட்டு அளவற்ற பாசத்தோடு வளர்த்தார். 'கோதை நாச்சியார்' என்றும், 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்றும் அழைக்கப்பட்ட ஆண்டாள் பிராட்டியே அக்குழந்தை! பூமித்தாயின் திரு அவதாரமாக கருதப்பட்டவர்.



கோதைக்கு வடபெருங்கோயிலுடையான் பெருமையையும், வைணவதர்ம சாராம்சத்தையும் சொல்லிக்கொடுத்து வளர்த்து வந்தார் விஷ்ணுசித்தர். துளசியானது இயற்கையாகவே அளவற்ற நறுமணத்தோடு இருப்பதுபோல கோதையும் பெருமாளின்மேல் பெரும் பக்தியும், காதலும் கொண்டாள்.

தன்னை பெருமாளுடன் ஒப்புவித்துக்கொள்வாள். அவர்போலவே தன்னை அலங்கரித்துக்கொள்வாள். கண்ணாடி முன்னால் நின்று தன்னையே அவராக நினைத்துக்கொள்வாள். விஷ்ணுசித்தர் பகவானுக்காக தொடுத்துவைத்திருக்கும் மாலையை தான் முதலில் அணிந்து அழகு பார்ப்பாள். தந்தைக்குத் தெரிந்தால் ஆபத்து என்பதால் அவர் வீட்டில் இல்லாத நேரத்தில் இப்படி நடப்பாள்.



ஒருநாள் விஷ்ணுசித்தர் கோதையை மாலையுடன் பார்த்துவிட்டார். இதுவரை இவள் சூடிய மாலையை பெருமானுக்குச் சாத்தினோமே .. அபசாரம் புரிந்தோமே என்று துவண்டுவிட்டார். தந்தையின் நிலையை எண்ணி கோதையும் துயரமடைந்தாள். தனது தவறை உணர்ந்தாள். அன்று ஆலயத்திற்குச் செல்லாமல் வேதனையோடு படுத்துவிட்டார் விஷ்ணுசித்தர். தொடுத்துவைத்திருந்த மாலையும் அப்படியே இருந்தது.

அன்றிரவு அவரது கனவில் எம்பெருமான் தோன்றினார். ''இன்று நீ ஏன் எனக்கு மாலை சூட்ட வரவில்லை? ''என்று கேட்டார். தனது மகள் மாலையை சூடிவிட்டதையும், வேறு மாலை தொடுத்து கொணர்வதாகவும் கூறினார் சித்தர். ஆனால் பகவானோ, ''உனது மகள் சூடிய மாலையைத்தானே இதுவரை அணிந்தேன். நீ தொடுத்ததிலும் பார்க்க அதிக நறுமணமுள்ளதாக அது இருந்ததே.. அதுதான் எனக்கு வேண்டும்.. ''என்றார். இதனால் மகிழ்ந்த விஷ்ணுசிதர் கோதையின் தெய்வீகத்தை எண்ணி வியந்தார்.

கோதையும் சூடிக்கொடுத்த நாச்சியாராக மார்கழி நீராடி, மாதவனை எண்ணி நோன்பு நோற்று,திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய பிரபந்தங்களைப் பாடி அருளினார் ..

இந்தமாத இஷ்டதெய்வம்

தெரிந்த தெய்வங்கள் தெரியாத தகவல்கள் ..

# ஸ்ரீ பைரவர்



முன்பு அந்தகாசுரன் என்றோர் சிவபக்தன் இருந்தான். ஒருமுறை அவன் பெருமானை நோக்கி கடும் தவம் புரிந்தான். மனமிரங்கிய ஈசனார் அவனுக்கு வேண்டிய வரங்களை வழங்கினார்.

சிவபக்தனாக இருந்தும் அசுர புத்தியால் ஆணவம் கொண்டான். அளவற்ற பெரும்பலம் அடைந்து விட்டதால் நாளா பக்கமும் போரில் இறங்கினான். எண்ணற்றோரைச் சிறைப்பிடித்தான். நிலவுலகையும் தாண்டி விண்ணுலகமும் அவனது போர்ப்பறை ஒலித்தது.

மும்மூர்த்திகளும்கூட எதிர்க்க வழியின்றி தடுமாறும் வேளையில் தேவர்களையெல்லாம் வகைதொகையின்றி கைது செய்தான். அவர்களை பெண்களைப்போன்று சேலையணிந்து, வளையல்களணிந்து வருமாறு துன்புறுத்தினான். கண்களில் மைதீட்டி பெண்களைப்போல தனக்கு சாமரம் வீசுமாறும் கட்டளையிட்டான்.

இருள் என்னும் சக்தியே இவனது பிரதான பலமாக இருந்தது. அதனால் பிரபஞ்சம் முழுவதையும் இருளில் வைத்திருந்து ஆட்சி நடத்தினான். இருள்தான் அவனது அதிகாரமாக இருந்தது.

அனைவருமே அந்தகாசுரனுடன் போரிட்டுத் தோற்ற நிலையில் முழுமுதற் கடவுளாகிய சிவபிரானிடம் தஞ்சமடைந்தார்கள். தேவர்களின் துன்பத்தை களைவதற்கு திருவுளம் கொண்டார் பெருமான்.

முன்னாளில் தாருகாபுரத்தை எரித்து சாம்பராக்கிய பெருமான் சாந்தமடைந்த பின்னர், அந்த காலாக்கினியை தனது நெஞ்சில் ஒரு பகுதியில் வைத்திருந்தார். தேவர்களை காப்பாற்றுமாறு அந்த அக்கினிக்கு கட்டளையிட்டார் ஈசன். உடனேயே அதிலிருந்து அக்கினிக்குஞ்சாக ஒரு சக்தி வெளிப்பட்டது. அது பெரும் விஸ்வரூபமெடுத்தது.

**அப்படி விஸ்வரூபமெடுத்தவரே ஸ்ரீபைரவர்.**

அதுமட்டுமல்ல. எட்டுத்திக்குகளிலும் அந்தகாசுரனால் வியாபிக்கப்பட்ட இருளை அழிப்பதற்கு எட்டு பைரவர்களையும் உருவாக்கி, அவரவர் சக்தி தேவியருடன் இணைந்து ஸ்ரீபைரவருடன் புறப்படும்படி ஆணையிட்டார் இறைவன்.

அவ்வாறே எட்டு பைரவர்களும் தம்பதி சகிதமாக புறப்பட்டு ஸ்ரீபைரவருடன் சேர்ந்து, அந்தகாசுரனை அழித்தார்கள். இருளை சம்ஹரித்து உலகுக்கு ஒளியைக் கொடுத்தார்கள்.

இதனால் மகிழ்ந்துபோய் தேவர்களனைவரும் தமது ஆயுதங்களை பைரவரிடம் சமர்ப்பித்து வணங்கினார்கள் என்று புராணம் கூறுகிறது.

ஸ்ரீபைரவருடன் இணைந்து அருள் பாலிக்கின்ற எட்டு பைரவர்களும், எட்டு திசைகளிலிருந்தும் அடியவர்களுக்கு வருகின்ற துயர்களை நீக்கி அருள்கிறார்கள்.

தமது சக்தி தேவியருடன் அருள் பாலிக்கின்ற எண்திசை பைரவர்கள் இவர்கள்தான் ..


01. அசிதாங்க பைரவர் -- பிராம்மி
02. ருரு பைரவர் -- மகேஸ்வரி
03. உன்மத்த பைரவர் -- வாராஹி
04. குரோதன பைரவர் -- வைஷ்ணவி
05. சண்ட பைரவர் -- கவுமாரி
06. கபால பைரவர் -- இந்திராணி
07. பீஷண பைரவர் -- சாமுண்டி
08. சம்ஹார பைரவர் -- சண்டிகா

பைரவரை ஜைன சமயத்தில் விஜய பத்திரர், வீர பத்திரர், மணி பத்திரர், ஸ்ரீபைரவர், அபராஜிதர் என்று அழைக்கின்றனர்.

ஜைன சமயத்தில் 96 வகையான பைரவர்கள் வணங்கப்படுகிறார்கள். பௌத்த சமயத்தில் 84 வகையான பைரவர்களும் வாமம் என்னும் சாக்த மதத்தில் 64 வகையான பைரவர்களும் உள்ளனர்.

ஆகமங்கள், சாஸ்திரங்களில் கூறப்பட்ட அஷ்ட பைரவர்களின் விளக்கங்களை கூர்ந்து நோக்கினால் மேலே தரப்பட்ட தகவல்கள் இன்னும் தெளிவாக புலனாகும்.

அஷ்ட பைரவர்களும் அறுபத்திநான்கு காலங்களில், அறுபத்திநான்கு தோற்றங்கள் கொண்ட பைரவர்களாக காட்சி தருகிறார்கள் என்பது இந்துக்களின் நம்பிக்கை.






நவக்கிரகங்களுக்கும் பிராண தேவதையாக போற்றப்படுபவர் பைரவர் ஆவார். பன்னிரண்டு ராசிகளையும் தனது உடலில் அங்கமாகக் கொண்டிருக்கிறார் என்பதும் இவரின் பெருமைக்குச் சான்று.

தேவ, அசுர, மானிடர்களும் அஞ்சும் கிரகமாகிய சனிபகவானுக்கே வரம் தந்தவராகவும், சனிக்குரிய கடமையை போதித்த குருவாகவும் திகழ்பவர் பைரவரே. சனியின் வாதநோயையும் தீர்த்தவராக விளங்குபவர் இவர்.

தனது தமையனாகிய எமன் பைரவரிடம் பெற்றிருந்த அதீத வரங்களை கண்ணுற்றார் தம்பியாகிய சனி. தானும் அதுபோல வரம்பெறும் பொருட்டு பைரவரை நோக்கி தவம் புரிந்ததாகவும் புராணம் கூறுகிறது. அந்த தவவலிமையால் சனியின் முன்னே தோன்றிய பைரவர், மும்மூர்த்திகளையும் கட்டுப்படுத்தவல்ல கிரக சக்தியை வழங்கினார். காலவர்த்தமான நிர்ணயப்படி, அதாவது சோதிட ரீதியில் அமையும் சனிப்பெயர்ச்சியில் நல்லதையும், தீயதையும் வழங்கும் சக்தியை அருளினார்.

கூடவே ஒரு நிபந்தனையும் சனியிடம் முன் வைத்தார் பைரவர்.சனியின் சஞ்சாரத்தால் கஷ்ட நஷ்டத்திற்கு ஆளாகுபவர்கள் தன்னை வழிபட்டு சரணடைந்தால் அவர்களுக்கு நன்மையே புரிய வேண்டுமென்பது பைரவரின் கட்டளை.

அதனால்தான் ஏழரைநாட்டுச்சனி, அஷ்டமச்சனி, ஜன்ம சனியால் துன்புறுவோர் வைரவ வழிபாடு செய்து நிவாரணம் பெறுவதைக் காண்கிறோம். அத்தகைய பைரவப்பெருமான் இந்துக்களின் முக்கியமான இஷ்ட தெய்வமாவார்




## மகளிர் பக்கம் ..

இது மார்கழி மாதத்தில் போடவேண்டிய கோலங்களில் ஒன்று ..

மாதங்களுக்கென்றும் கோலங்கள் உண்டா என்று கேள்வி எழுகிறதா?

நிச்சயமாக உண்டு. மாதங்களை மங்களகரமாக வரவேற்று, உபசரித்து, வரங்கள் பல பெற்று வழியனுப்பி வைத்திட நம் சமயத்தில் நிறையவே அனுகூலங்கள் உண்டு. அவைகளில் ஒன்றுதான் வாசலில் மாதத்திற்குறிய கோலம் தருவதும். மார்கழி என்பது அரங்கனின் அருட்கடாட்சம் கிடைக்கின்ற மாதமல்லவா!

அதனால் அவரை துயிலெழுப்பி ஆராதிக்கும் பதிகம் இந்த கோலத்துள் உண்டாம் ..

வாய்ப்பை தவற விடாமல் இக் கோலத்தால் மார்கழியை கைக்குள் போடுவீர் ..

### இதோ அந்த பதிகம் ..

*அம்பறமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்*
*எம்பெருமான்! நந்த கோபாலா! எழுந்திராய்!*
*கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!*
*எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்!*
*அம்பற மூடறுத் தோங்கி யுலகளந்த*
*உம்பர்கோ மானே! உறங்கா தெழுந்திராய்!*
*செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!*
*உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்!*

### *மார்கழி மாதம் ..*
### *அது தேவர்களின் வைகறைப்பொழுது!*

மனிதர்களுக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒருநாள் பொழுதுதான்!

அந்த ஒருநாளில் மார்கழி மாதமானது தேவர்களுக்கு ஒரு பொழுதாக ஆகிறது. அது அவர்களுக்கு வைகறைப் பொழுதாகவும் இருக்கிறது. வைகறையின் காலை வழிபாட்டுக்கு நிகரான இன்பம் கிடையாது.

உடலில் சுறுசுறுப்பும், உள்ளத்தில் தெளிவும் ஊற்றெடுக்கும் பிரம்ம முகூர்த்தம் அதுவாகும்.

கன்னிப் பெண்களுக்குரிய மார்கழி நோன்பு, பெருமாளுக்குரிய வைகுண்ட ஏகாதசி, சிவனுக்குரிய திருவாதிரை மற்றும் பழையன கழியும் போகிப்பண்டிகையும் மார்கழியிலேயே வருகிறது ..



# மாணவர் சமய அறிவுப்போட்டி
# இல: 07






அன்பான மாணவர்களே,

சமய அறிவை ஊட்டும் வண்ணம் இந்த 'பக்தி விஜயம் ..' வெளிவருகிறது. இது உங்களுக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது. பரீட்சைகளில் புள்ளிகள் பெறுவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வெற்றிபெறுவதற்கு சமயத் தகவல்கள் மிக அவசியம்.

இல: 05 சமய அறிவுப்போட்டியில் பெருமளவில் நீங்கள் பங்கு பற்றியிருந்தீர்கள். அனைவரையும் பாராட்டுகிறோம் ..



**இல: 05 போட்டிக்கான விடைகள் ..**

*01. ஏடு, 02. ஹயக்ரீவர், 03. அபிராம பட்டர், 04. கடகம், 05. மாலினி, 06. அனுசூயா, 07. அலங்கார, 08. கொடிமரம், 09. கிழவி, 10. திருத்தணிகை*

1ம் பரிசு : அ. கபிசன், தி- கோணேஸ்வர இந்துக்கல்லூரி
2ம் பரிசு : ஜே. அசான், மல்வத்தை வீதி, தெகிவளை
3ம் பரிசு : பி. வேதிகா, வ- கனகராயன்குளம் ம.வி.



## இம்மாத வினாக்கள் --

01. சூரனை அழிக்க முருகனுக்கு உமாதேவியார் ............ கொடுத்தார்.
02. ராமர் வனவாசம் புரிந்தது ................ காண்டத்தில் ஆகும்.
03. திருநாவுக்கரசு நாயனாரின் பெயர்களில் ஒன்று ............
04. காகம் அகத்திய முனிவரின் .............. இல் வந்தமர்ந்தது.
05. நாரத முனிவர் .............. விரதம் அனுட்டித்தார்.
06. கார்த்திகையில் ஆலயத்தில் ......................தீபம் ஏற்றப்படும்.
07. தனது துணையை விடுவிக்கும்படி சீதையிடம் .............. கெஞ்சியது.
08. பெருமாளுக்குரிய மாலையை ................ அணிந்தாள்.
09. திருமுருகாற்றுப்படை ..................... அடிகள் கொண்டது.
10. மார்கழி மாதம் அதிகாலையில் ஆலயங்களில் ............. பாடல் ஒலிக்கும்.



*சரியான விடைகளை எழுதி அனுப்புகின்ற மாணவர்கள், குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசளிக்கப்படுவார்கள்.*



அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர்,
'பக்தி விஜயம் ..'
555, புதுத்தெரு, மன்னார்.



*(இப்பக்கத்தை கத்தரிக்க வேண்டாம் .. வேறு பேப்பரிலேயே எழுதி அனுப்பவும்.)*

# மார்கழியின் மகத்துவங்கள்

*''மாதங்களில் நான் மார்கழி ..''*
*என்கிறார் கிருஷ்ணபகவான்.*

கவிஞர்களும், புலவர்களும்கூட தனது கற்பனையில் உதிக்கின்ற மங்கையரை வர்ணிக்கும்போது 'மாதங்களில் அவள் மார்கழி ..'' என்று எழுதுகிறார்கள்.

மார்கழியில் மகிழ்ந்திருக்காத மனிதன் எந்த மாதத்திலும் மகிழான். அதிலும் பக்தியிலும், ஆன்மீகத்திலும் மனமானது அதீத பரவசங்களை இம்மாதத்தில் பெற்று விடுகிறது ..

ஆலயங்களில் இம்மாதத்தில் கடலலைகள்போல பக்தர்கள் அலை மோதுவர். திருவரங்கனான பெருமாள் தலம் கொண்ட இடங்களிலோ சனநெரிசலைக் கேட்கவே வேண்டாம். இவ்விடங்களில் திருப்பாவையும், திருவெம்பாவையும் ஒலித்துக்கொண்டேயிருக்கும். ஊரே விழாக்கோலம் காணும்.

மார்கழி மாதத்தில் மட்டும் பெருமாள் கோயில்களில் அநேகமாக விஸ்வரூப தரிசனம் கிடைக்காது. அனந்த சயனத்தில் இருக்கும் பெருமாளைத் துயிலெழுப்ப, மார்கழி மாதத்தில் அதிகாலையிலேயே திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களாக ஆண்டாள் பாசுரங்களைப் பாடுவார்கள்.

மார்கழி உற்சவத்தில் அரையர் சேவையில் நாலாயிரம் திவ்ய பிரபந்தப் பாடல்கள் இருக்கின்றன. அவற்றை அபிநயத்தோடு பாடும்போது பள்ளியில் இருந்து அரங்கப்பெருமாள் செவிமடுத்துக் கேட்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். தமிழின் சுவையை பரிபூரணமாக அனுபவிக்கலாம்.

உற்சவகால எட்டாவது தினத்தில் அரங்கர் குதிரை வாகனத்தில் கோயிலின் கிழக்குப் பகுதிக்கு எழுந்தருள்வது பொதுவான வழக்கம். அங்கே ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு சமூகத்தினர் பெருமாள் முன்னிலையில் கௌரவிக்கப்படுவார்கள். ஆனால் இது இலங்கையில் இடம்பெறுவதாக . தெரியவில்லை. இந்நிகழ்வுக்கு வேடுபரி என்று பெயர்.

இந்நாட்களில் சம்பாரதோசை, செல்வரப்பம் என்ற இருவகை பிரசாதங்கள் கூடுதலாக வழங்கப்படுவதை இந்திய கோயில்களில் காணலாம். அவற்றின் சுவையும், மணமும் அருமையாம்.


**சம்பாரதோசையும், செல்வரப்பமும் கூடுதல் பிரசாதங்கள் ..**



**அபியத்துடன் பாடல்! அனுபவித்து ரசிக்கும் அரங்கன்!!**



# நலம் தரும் நாட்களும், விரதங்களும் ..




17. 11. 2012 -- சனிக்கிழமை
சதுர்த்தி விரதம்

18. 11. 2012 -- ஞாயிற்றுக்கிழமை
ஸ்கந்த பஞ்சமி

19. 11. 2012 -- திங்கட்கிழமை
இராமநாதர் குருபூஜை,
ஸ்கந்தஷஷ்டி விரதம்

21. 11. 2012 -- புதன்கிழமை
கோஷ்டாஷ்டமி,
அட்டமி - நவமி

24. 11. 2012 -- சனிக்கிழமை
உத்தான ஏகாதசி விரதம்

25. 11. 2012 -- ஞாயிற்றுக்கிழமை
பிரதோஷ விரதம்

26. 11. 2012 -- திங்கட்கிழமை
இரண்டாம் கார்த்திகை
சோமவாரம்

27. 11. 2012 -- செவ்வாய்கிழமை
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்

28. 11. 2012 -- புதன்கிழமை
பூரணை விரதம், சர்வாலய தீபம்,
வீடுகளில் தீபம், விஷ்ணுவாலய தீபம்

29. 11. 2012 -- வியாழக்கிழமை
விநாயக விரதாரம்பம்

02. 12. 2012 -- ஞாயிற்றுக்கிழமை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

03. 12. 2012 -- திங்கட்கிழமை
மூன்றாம் கார்த்திகை
சோமவாரம்

05. 12. 2012 -- புதன்கிழமை
ஆறுமுகநாவலர் குருபூஜை

07. 12. 2012 -- வெள்ளிக்கிழமை
மெய்ப்பொருளார் குருபூஜை

09. 12. 2012 -- ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி விரதம்

10. 12. 2012 -- திங்கட்கிழமை
நான்காம் கார்த்திகை
சோமவாரம்

11. 12. 2012 -- செவ்வாய்கிழமை
பிரதோஷ விரதம்

12. 12. 2012 -- புதன்கிழமை
போதாயன அமாவாசை

13. 12. 2012 -- வியாழக்கிழமை
அமாவாசை விரதம்





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

## இம்மாதத் தகவல்கள்!

### கார்த்திகை ஒளிவெள்ளம்! ..

கார்த்திகை எனும்போது தீபங்களே கருத்தில் நிறைகின்றன. தீபங்களோ சுடர் தரும் ஆதாரம். சுடரில் நிறைந்திருக்கும் தத்துவங்களை அறியும்போது இலகுவாக வாழ்வானது தெய்வீகமாகிவிடுகிறது.


சுந்தரகாண்டத்தில் இலங்கையை இரத்தின தீபம் என்று வால்மீகி வர்ணிக்கிறார். ஸ்ரீ கிருஸ்ணபகவான் பகவத் கீதையில் சொல்லும்போது '' விளக்கின் ஜுவாலை ஆடாமல், அசையாமல் நின்று எரிவதுபோல, மனதை சஞ்சலப்படுத்தாமல் ஒருநிலையில் வைத்திருக்க வேண்டும்.'' என்கிறார்.

பதினாறு விதங்களில் தீபதானங்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்திருப்பதாக தகவல்கள் உள்ளன. குத்துவிளக்கில் ஐந்து முகங்கள் உண்டு. இந்த ஐந்து முகங்களையும் ஏற்றும்போது, பூரண லட்சுமீகரத்தை காணலாம்.

இவை ஐந்தும் பெண்களிடத்தில் இருக்கவேண்டிய சமயோசித புத்தி, சகிப்புத்தன்மை, மனஉறுதி, நிதானம், அன்பு ஆகிய ஐந்து குணங்களைக் குறிக்கிறது.

விளக்கு என்பதே ஒரு காரணப்பெயர்தான். இருளை விலக்கி, பொருளை விளக்குகிறது. ஜோதி வழிபாட்டை பின்பற்றியதன்மூலம் அஞ்ஞானம் என்ற இருள் அகல்கிறது. கடவுளைப்போல எங்கும் நிறைந்ததாக ஒளி விளங்குகிறது. அது இல்லாவிடில் கனல் இல்லை. கனல் இல்லாமல் கடல் ஆவி இல்லை. அது இல்லாமல் மழை இல்லை. மழை இன்றி உலக உயிர்கள் இல்லை. இப்படியான தீபத்தை வழிபடவேண்டும் என்பதற்காகவே உருவானது விளக்கீட்டுத்திருவிழா.மணமான பெண்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சீர்வரிசைகளில் குத்துவிளக்கு முதலிடம் பெறுவதற்கும் இதுவே காரணமாகும்.

### சீர்வரிசையில் குத்துவிளக்கின் முதலிடம்!



## சோமவாரம் ..

கார்த்திகைமாத முதல் சோமவாரம் தொடக்கம் வாரந்தோறும் சிவபெருமானைக்குறித்து அனுட்டிக்கும் விரதம் சோமவாரம் எனப்படும். சோமவாரம் என்பது திங்கட்கிழமையைக் குறிக்கும். இவ்விரதத்தை உபவாசம் இருந்து அனுட்டிக்கவேண்டும். அது இயலாதவர்கள் இரவிலே ஒருபொழுது உண்டு, சிவவழிபாட்டில் கழித்தல் நன்று. சோமவார விரதத்தினை வாழ்நாள் முழுவதுமோ, பன்னிரண்டு வருடங்களோ, மூன்று வருடங்களோ, ஒரு வருடமோ கடைப்பிடிக்கவேண்டும். பன்னிரண்டு வருடங்கள் அனுட்டிக்க முடியாதவர்கள் ஆண்டுதோறும் கார்த்திகை சோமவாரங்களில் முறைப்படி விரதம் நோற்கலாம்.


## சோமவார விரதம் ..

சகல விதமான நன்மைகளையும் தருகின்ற விரதம் இது. கார்த்திகையில் வருகின்ற நான்கு சோமவாரங்களிலும் உபவாசம் இருந்து, இரவில் சிவபிரானை பூஜிப்பதே இந்த விரதம்.

சோமன் என்றால் சந்திரன் என்று பொருள். உமையுடன் கூடிய சிவன் என்று மற்றொரு பொருளும் உண்டு. கார்த்திகை மாத சுக்கில பட்ஷ அஷ்டமியில் சந்திரன் தோன்றினான். தனது ஷயரோகம் அகல வேண்டி, சிவபெருமானை பூஜித்து நவக்கிரகங்களில் ஒருவர் ஆனான். அவன் காரணமாக சோமவாரமும் தோன்றியது.

சந்திரன் தோன்றியதும், பெருமானை ஆராதித்ததும், கிருதயுகம் தோன்றியதும், அவன் ஈசனது சிரசில் அமர்ந்ததும் கார்த்திகை சோமவாரங்களில்தான்.

''இத்தினத்தில் விரதமிருந்து சிவனை பூஜிப்போரது பிரம்மஹத்தி முதலிய சகல பாவங்களும் அகலவேண்டும், முக்தியும் பெறவேண்டும், ஷயம் முதலிய நோய்களும் வரக்கூடாது. என் பெயரால் எனது வாரத்தில் இந்த விரதம் பிரசித்தமாகவேண்டும் ..'' என்று சோமன் பெருமானை பிரார்த்தித்தான். அதனால் சோமவாரமும் சிறந்தோங்கியது.



## சோமவார உத்யாபன பூஜை

கைலாய மலைச்சிகரத்திலே சிவபிரானது உத்தமாங்கத்தில் சடையில் ஸ்தானம் பெற்ற சந்திரன் சோமவார விரதத்தினை மேற்கண்டவாறு உலகிற்கு பறைசாற்றுகிறான். பதினான்கு ஆண்டுகள் சோமவாரந்தோறும் பூஜை செய்து பன்னிரண்டு கலசங்களில் பிரதிமைகளுடன் சிவன், பசுபதி, ருத்திரன், நீலகண்டன், மகேஸ்வரன், சர்வன், ஈசன், பிநாகி, விருஷபத்வஜன், சங்கரன், மகாதேவன், சோமேஸ்வரன் என்ற நாமங்களை உச்சரித்து தியானித்து, ஆவாகனாதி சோடசோபசார பூஜை செய்து, இரவெல்லாம் கண்விழித்து கதைகேட்டு, காலையில் ஹோமம் செய்து கலச ஜலத்தில் அபிஷேகம் செய்து, தம்பதி பூஜை செய்யவேண்டும். இதற்கு என்னென்ன பலன் வேண்டுமென சந்திரனே கேட்டுவிட்டான்.

அவனது மகாபாவங்களை அகற்றி, சத்துருபயத்தையும் போக்கி, ஷயரோகத்தையும் குணப்படுத்தி அவனை தனது ஆபரணமாகவும் அணிந்துகொண்டார். அதனால் சந்திரமௌலி எனவும் பெயர் கொண்டார் ஈசன்.





# பாவமென்ன செய்தேன்!..

அறிந்தும், அறியாமலும் செய்தாலும் தவறுகள் என்னவோ நட்டத்திற்குறியவைதான் என்பதை இந்த காவியச் சம்பவம் காட்டுகிறது ..

ஸ்ரீராமனை விட்டுப் பிரிந்து போகவேண்டிய நிலை சீதைக்கு வருகிறது. ராமாயணத்தின் உத்தரகாண்டத்தில் நிகழும் இச்சம்பவத்தை காண்பவர்கள் கண்கலங்காமல் இருக்கமுடியாது. ''நான் எந்த பாவமும் செய்ததாக நினைவில்லையே .. ஏன் எனக்கு இது நேர்ந்தது..'' என்று வருந்தினாள் சீதை. ஆனால் தனது பருவ வயதில் செய்த தவறே இதற்குக் காரணமாகியதை அறியாதிருந்தாள் ..

.. கமலக்கண்ணனான ராமன் விசுவாமித்திரருடனும், லட்சுமணனுடனும் மிதிலா நகர வீதியில் வந்துகொண்டிருந்த நேரத்தில், தனது உப்பரிகையில் சீதை நின்றுகொண்டிருந்தாள். அவளருகில் இரண்டு கிளிகள் அமர்ந்து அழகாக பேசிக்கொண்டிருந்தன.

கம்பீரமான ராமனின் பேரழகில் மயங்கி நின்ற சீதையின் காதில் அச்சமயம் அக்கிளிகளின் உரையாடலும் விழுந்தது.

'' பாரேன், இந்த ராஜகுமாரனை! என்னே எழில்!! நம் இளவரசியை மணக்கப் போகிறவன் இவனே ..'' என்று வர்ணிக்க ஆரம்பித்தது பெண்கிளி.

இந்த வாக்கியங்கள் காதில் விழவும் அகமகிழ்ந்தாள் சீதை. அதோடு நிற்காமல் ஒரு காரியமும் செய்தாள். அதுவே பின்னாளில் கணவனைப் பிரியும் நிலையை உருவாக்கியது ..

தனது வருங்கால கணவனின் அழகை வர்ணித்த பெண்கிளியை ஒரு கூட்டில் அடைத்து வைத்தாள். ராமனின் எழிலை எப்போதும் அக்கிளியின் வாயிலாக கேட்டு ஆனந்திப்பதே சீதையின் நோக்கம்.


ஆனால் தனது துணையை பிரிந்த நிலையில் துன்பமுற்று சீதையிடம் வந்தது ஆண்கிளி.

''என் அருமைத் தாயே, என் மனைவி என்னைப் பிரிந்திருக்காளே! அவளை கூட்டிலே அடைத்தது நியாயமா? தவிர, கர்ப்பமாகவேறு இருக்கிறாள். இந்நிலையில் கணவனாகிய நான் உடனிருப்பதன்றோ முறை. வேண்டுமானால் அவள் முட்டையிட்டு, குஞ்சு பொரித்தபின் அடைத்து வையுங்களேன் ..'' என்று கெஞ்சியது.

ஆனால் சீதா பிராட்டியாருக்கு தனது மகிழ்ச்சியே பெரிதாகப்பட்டது. ராமனின் பேரெழிலை கேட்டு மகிழ்வதற்காக எதையும் செய்ய தயாராக இருந்தாள். அதனால் ஆண்கிளியின் கோரிக்கையை நிராகரித்தாள்.

இதனால் மனமுடைந்தது ஆண்கிளி. ''தாயே, எம்மைப்போலவே தாங்களும் கர்ப்பநிலையில் துணையைப் பிரிந்து தவிப்பீர்கள்'' என்று சாபமிட்டது. அதன் பாதிப்பும் சீதையின் வனவாசத்திற்குக் காரணமாகியது.






# மார்கழி டிப்ஸ் ...

சைவ மக்கள் திருவெம்பாவை விரதத்தை மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதிரை தினத்திற்கு ஒன்பது நாட்களுக்கு முன்னர் ஆரம்பிப்பார்கள். பத்தாவது நாளாகிய திருவாதிரை அன்று விரதம் நிறைவுறும் ..

ஆனால் வைணவ சமயத்தில் மார்கழி மாதத்தில் முழு நாட்களிலும் விரதமிருந்து மக்கள் வழிபடுவார்கள் ..

மார்கழி மாதம் தட்ஷிண அவயத்தின் கடைசி மாதமாகும். தேவர்களுக்கு இம் மாதம் ஒரு அதிகாலைப் பொழுதாகும். இக்காலத்தில் வைகறையில் இறை தரிசனம் செய்யும்போது பெரும்பலன் கிடைக்கிறது ..

திருவாதிரை திருவெம்பாவையும், விநாயகர் சஷ்டியும் மார்கழியில் பெருமை பெறுகிறது. சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் இம் மாதத்திலேயே வருகிறது. சைவர்களும், வைணவர்களும் பேறு பெறும் புண்ணிய காலப்பகுதி இதுவாம் ..


கன்னிப்பெண்களுக்கு அதிக பலன் தருவது மார்கழி விரதமாகும். மங்கையர்கள் அதிக சிரத்தையுடன் நோற்பதால் 'பாவை நோன்பு ' என்றும் அழைக்கப்படுகிறது ..




## மகளிர் பக்கம் பக்கம்

கோலம் போடாதவர்கள்கூட மார்கழியில் வாசலில் கோலம் போடுவார்கள். வைகுண்ட ஏகாதசியிலே பெருமாள் தனது அரிதுயில் களைந்து கண்விழிப்பார். இது மார்கழியிலேயே வருவதால், தேவர்கள் வைகுண்டத்திற்குப் பறந்து வரும்போது வீட்டு வாசல்களில் போடப்பட்டிருக்கும் கோலங்களைக் கண்டுகளித்து, வாழ்த்திச் செல்வதாக நம்பிக்கை உண்டு.

அதோடு, இந்த மாதத்தில் போடப்படுகின்ற கோலத்தில் பசுஞ்சாணம் இட்டு, அதில் ஒரு பூசணிப்பூவையும் வைத்துவிட்டால் வீட்டின் சிறப்புக்கு ஈடில்லை ..



## திருவாசக தெய்வீகத் தொடர் ..



கலிவெண்பா
திருச்சிற்றம்பலம்

**உபநிஷத் மந்திரங்களின் விளக்கத்துடன்**
**திருப்பெருந்துறையில் அருளிய**

# சிவபுராணம் ..

அனாதி முறைமையான பழமையோடு
அருளும் சிவபிரான்

### 01 -- நமச்சிவாய வா அழ்க நாதன்றாள் வாழ்க

''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க..''

**நமச்சிவாய என்னும் மந்திர சொரூபமாய் இருப்பவரைப் போற்றுகிறேன். ஜகத்தில் அனைத்துமாய், அதில் ஊடுருவியிருந்து அதை ஆளுகிற விச்வநாதனைப் போற்றுகிறேன் ..**

*நமச்சிவாய என்னும் பஞ்சாட்சரம் அல்லது இறைவனைப்பற்றிய ஐந்தெழுத்து வேதத்திற்கு ஹிருதயம் ஆகிறது. உயிருடன் இலங்குகிற உடலில் நடுநாயகம் வகிப்பது ஹிருதயம். அது வாழ்வுக்கு இன்றியமையாதது. மூளை வேலை செய்யாவிட்டாலும் வாழ்வு நடந்தேறும்.*

*ஆனால் ஹிருதயம் வேலை செய்யாவிட்டால் மரணம் நேரும். உடல் வாழ்க்கையில் ஹிருதயம் பெற்றுள்ள பெருநிலையைப் பாரமார்த்திக வாழ்க்கையில் பஞ்சாட்சரம் பெற்றுள்ளது.*

*யஜுர் வேதத்துக்கு நடுநாயகம் வகிப்பது ஸ்ரீருத்திரம்: இந்த ஸ்ரீருத்திரத்தில் நடுநாயகம் வகிப்பது நமசிவாய என்னும் மந்த்ரம். இதை இடையறாது உச்சரிப்பவர் சிவ சொரூபம் ஆகின்றனர்.*

*வேதம் ஓதுவதும், ஸ்ரீருத்திரம் ஓதுவதும் எல்லார்க்கும் சாத்தியமன்று. அதற்கு அதிகாரிகள் ஆவது மிகக் கஷ்டம்: எல்லாரும் அதிகாரிகள் ஆவதுமில்லை. ஆனால் நமசிவாயவென்று நவிலுவது மிக எளிது. அது யாருக்கும் இயலும். அது எல்லார்க்கும் பொது: எல்லார்க்கும் சொந்தம். தீட்சை பெற்றுக்கொண்டும் அதை பகரலாம்: தீட்சை பெறாதும் பகரலாம். தாயைக் கூவியழைக்க சேய்க்கு உரிமையுண்டு. அதற்கு தீட்சை தேவையில்லை. அங்கனம் இறைவனை அவனுடைய மந்த்ரத்தைக்கொண்டு கூவியழைக்க உயிர்களுக்கு உரிமையுண்டு.*

*உபநிஷத் மந்த்ரம் -- 01*

நம: சிவாய ச சிவதராய ச
( ஸ்ரீ ருத்ரம் 8--1 )

*சிவம் என்னும் சொல் மங்களம் எனப் பொருள் படுகிறது.*

*சிவதரன் என்பது தன்னையடைந்தவரை சிவமாக்குகிறவன் என்று பொருள் படுகிறது.*

**உபநிஷத் விளக்கம் -- 01**

கடல் யாண்டும் தன்மயமாயிருந்துகொண்டு அதை வந்தடைகிற நீரையெல்லாம் அது தன்மயமாக்குவது போன்று சிவனார் தம்மை வந்தடைபவர்களை யெல்லாம் சிவமாக்குகிறார்.

பரம்பொருள் நாதாதீதமாய், அதாவது நாதத்துக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது. பின்பு அதே பொருள் நாத வடிவமாய், அதாவது நாத பிரம்மமாய் இருக்கிறது. நாதம் அல்லது ஓசையில் ஸ்தூல தோற்றமே இப்பிரபஞ்சமாகிறது. பிரபஞ்சத்தில் ஜடப்பொருள்களாய் இருப்பவை கீழானவை: சேதனமாய் அல்லது உயிர்களாய் இருப்பவை மேலானவை. அவையாவும் வெவ்வேறு வகைப்பட்ட ஓசையின் தோற்றங்களாம்.

நாதத்தில் வருண மந்த்ரம் இருக்கிறது. அதைச் சரியாக உச்சரித்தால் மழை வருகிறது. அக்னி மந்த்ரம் என்பது ஒன்று இருக்கிறது. இதை முறையாக ஒலித்தால் தீப்பற்றிக்கொள்ளும். இப்படி இயற்கையில் உள்ள அனைத்தும் ஓசையின் தோற்றங்களாம். ஓசைகளுள் மனிதனைக் கடவுள்பால் எடுத்துச் செல்லவல்லவைகள் இருக்கின்றன. அவைகளே சிறப்பான மந்த்ரங்கள் எனப்படுகின்றன. அவைகளுள் 'நம: சிவாய' என்பது மிக முக்கியமானது. ஆதலால் அது வேதத்தின் உட்பொருள் எனப்படுகிறது. அதை ஓதி உய்வு அடைந்த மாணிக்கவாசகர் எடுத்த எடுப்பில் அதை மூலமந்த்ரமாக வைத்திருப்பது மிகப் பொருத்தமானது.

ஆத்ம சாதனங்களுள் நாம ஜபம் மிகச் சுலபமானது. எப்பொழுது வேண்டுமானாலும் நாமத்தை ஓதிக்கொண்டே இருக்கலாம். வேறுபல அலுவல்களுக்கிடையிலும் அதை சொல்லிக்கொண்டே இருக்கலாம். நாமத்தை வாய்விட்டுச் சொல்லுவது ஸ்தூல ஜபம். அதற்கு வலிவு சாமானியமானது.



உபநிஷத் மந்த்ரம் -- 02

ஈசா வாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்!
தேன த்யக்தேன புஞ்சீதா மா க்ருத: கஸ்ய ஸ்வித் தனம்!!

( ஈசாவாஸ்யோபநிஷதம் -- 1 )

ஜகத்தில் மாறிமாறி யமைகிற யாவும் ஈசனால் வியாபிக்கப்பெற வேண்டும். இத்தகைய தியாகத்தின் மூலம் உன்னை ஒம்புக. யாருடைய செல்வத்தையும் விரும்பாதே.

## மழை வேண்டுமா, இருக்கிறது வருண மந்திரம்





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

நா அசைவதற்கிடையில் சொல் வெளியில் கேட்பதில்லை. அத்தகையது சூட்சும ஜபம். அதற்கு வலிவு இன்னும் அதிகம். நாவும் அசையாமல் மனது மனதுக்குள்ளேயே நாமத்தை சொல்லிக்கொண்டிருப்பது ஜபத்தின் காரண நிலை. அல்லது உச்ச நிலை. அதற்கு வலிவு மிக உண்டு. பக்தன் அடைகிற பரிபக்குவங்களுள் ஜபஸித்தி என்பது மிக முக்கியமானது. மற்ற மனவிருத்திகளுக்கிடையில் மனதில் ஒரு பகுதி இடையறாது இறைவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டே இருக்குமாகில் அது ஜபஸித்தி எனப்படுகிறது.

வித்து வேறு விருட்ஷம் வேறு அல்ல. வித்துவே விருட்சமாகிறது. சூட்சும நிலையில் இருப்பது வித்து. ஸ்தூல நிலையில் இருப்பது விருட்ஷம். அங்கனம் நமச்சிவாய என்னும் நாதவிந்து அதிசூட்சுமமானது: அது காரணநிலை: பிரபஞ்சத்தில் அனைத்துமாய் அதை ஆண்டு வருகிற மூர்த்தியோ காரியநிலை. அவருடைய ஆளுகைக்கு அனைத்தும் உட்பட்டிருப்பதால் அவர் நாதன் அல்லது தலைவன் எனப்படுகிறார்.

அடுத்த இதழில் சிவ அனுக்கிரகத்துடன்,

**இமைப்பொழுதும் என் நெஞ்சில் ..**

(விளக்கவுரை)

நன்றி : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்,
திருவாசகம் புண்ணிய நூலிலிருந்து
உதவி : சிவ அடியார் க. ஜீவானந்தம், மன்னார்

## உபநிஷத் விளக்கம் -- 02

அசையாத கடல் உருண்டோடுகிற அலையாகவும் காட்சி கொடுக்கிறது. அத்தகைய அலையையும் கடல் எனக் காண்பது முறை. உலகாக இயங்குபவன் ஈசன். ஆதலால் உலகையே ஈசனாக உணர்வது ஆத்மசாதனம். ஈசனாகக் காண்பதால் அதனிடத்து நாம் வைக்கிற இணக்கத்தை மேலானதாக்குகிறோம். கீழான இணக்கத்தை மேலான இணக்கமாக மாற்றுவது தியாகம்.

குழந்தையானது தன் தாயோடு இணங்கியிருந்து இன்பம் பெறுதலில் தூய்மையுண்டு. ஜீவன் ஈசனோடு இணங்கியிருந்து இன்பம் பெறுதலில் தூய்மை மிகவுண்டு. ஒவ்வொரு ஜீவனுக்கும் நலன் தருவதற்கு ஏற்றவளவே ஈசன் செல்வத்தை எடுத்து வழங்குகிறார். அதற்குமேல் எதையும் அபகரிக்கும் மனப்பான்மை ஆத்மசாதகனுக்கு வருவதில்லை.

நமச்சிவாயன் என்னும் சொல் அவன் ஓசை வடிவினன் என்பதை விளக்குகிறது. நாதன் என்னும் சொல் விசுவநாதன் என்னும் சொல்லாக விரிவடைந்து தலைவன் அல்லது ஆளுபவன் எனப் பொருள்படுகிறது.

இந்த உபநிஷத மந்த்ரமும் அதே கருத்தை விளக்குகிறது : ..



**உடலின் மத்தியில் சிறிய,**
**தூய இதய கமலம்**
**இருக்கிறது!**
**அது ..**
**பரம்பொருளுக்கானது!!**

உபநிஷத் மந்த்ரம் -- 03


தஹ்ரம் விபாபம் பரமேஸ்மபூதம் , யத்புண்டரீகம் புரமத்ணஸம்ஸ்தம் !
தத்ராபி தஹ்ரே ககனம் விசோகம், தஸ்மின் யதந்த ஸ்ததுபாஸிதவ்யம் !!

( மஹாநாராயணோபநிஷதம் 12 -- 16 )

பரம்பொருளுக்கு உறைவிடமாக உடலின் மத்தியில் சிறிய, தூய ஹிருதய கமலம் இருக்கிறது. இந்த தகராலயத்தில் துயரற்ற வெளியுளது. அது உபாஸிப்பதற்கு உரியது.

## இது தெய்வீக சீசன் ..

# ஐயப்ப சரணம் அளிக்குமே அபயம்!..



சுவாமி ஐயப்பனின் புகழ்மணம் கமழும் கார்த்திகை தொடங்கிவிட்டது ..

வீதிகளும், கோயில் வளாகங்களும் அவரின் பக்தர்களின் தனித்தோற்றத்தால் தெய்வீகமடையும் நேரம் இது. கடுமையான விரதத்தை மேற்கொண்ட நிலையிலும் அதுவே ஒரு தேவாம்சத்தின் பொலிவை அவர்களின் முகத்தில் தந்துவிடுகிறது!

ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து 41 நாட்கள் மேற்கொள்ளும் இந்த விரதத்தின் சக்தி மகத்தானது. பெரும் மனவலிமையோடு ஆற்றும் தெய்வத்திற்கான தியாகத்தை இதில் காணலாம். உலகத்தோடு ஒன்றாமல் தனக்கென்றோர் உலகத்தில் ஐயப்பனுடன் வாழ்ந்து கழிக்கின்ற இந்த நாட்களுக்கு இணையான சுகத்தை எந்தவொரு நாளும் தராது.

சுவாமி ஐயப்பன் சின்முத்திரையோடு யோகாசன மூர்த்தியாய் சபரிமலை திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டவராவார்.

ஹரிஹர புத்திரரான அவரை சரணம் சொல்லி சரணடைந்துவிட்டால் அவரின் பக்தனுக்கு சகல சித்திகளும் கைவருகின்றன. ஏனெனில், அவர் சிவபெருமான், மகாவிஷ்ணு ஆகிய இருபெரும் சக்திகளின் அம்சமாவார்!

கஷ்டப்படாமல் எதுவும் கிடைக்காது என்பதற்கேற்ப ஐயப்ப விரதத்தை கிரமமாக அனுஷ்டித்து வந்தால், இதில் கிடைக்கின்ற பலனால் எந்த துன்பமும் எளிதில் விலகும்.



## சில விரதநியதிகள் ..

தாய் தந்தை ஆசியுடன் ஆலயத்தில் பூசை செய்தவுடன் குருசாமி ஒருவரின் கையால் ஆலயத்தில் மாலையை அணிந்துகொள்ள வேண்டும். நீலம், கருப்பு, காவி நிறத்தில் ஆடை அணியவேண்டும். பெண்களைப் பற்றிய சபல எண்ணங்கள் வரக்கூடாது. "சாமியே சரணம்.."என்று சொல்லி உரையாட வேண்டும். உறங்கும்போது படுக்கை, தலையணை நீக்கி வெறும் துண்டை மட்டும் பாவிக்க வேண்டும். பாதணி, குடை முதலிய பொருட்களை தவிர்க்க வேண்டும். மரண வீடு, சடங்கு வீடுகளுக்கு செல்லக்கூடாது. சபரி மலைக்கு புறப்படும்போது "போய் வருகிறேன் .." என்று யாரிடமும் கூறக்கூடாது ..




அக்கினியை வாயால் ஊதி அணைக்கவோ, எழுப்பவோ ஆகாது. அன்னம், நெய், உப்பு இவற்றை கையால் பரிமாறல் ஆகாது. இரவில் மிஞ்சும் உணவுகளை மண் பாத்திரத்தில் வைத்தல் ஆகாது. வாசல்படி, அம்மி, உலக்கை, உரல், முறம் இவற்றின்மேல் அமர்தல் ஆகாது ..

உருத்திராட்சம் அணியாதவர்கள் சிவ பூஜை செய்தல் ஆகாது ..

பலிபீடம், கொடிமரம் ஆகிய இடங்களில் மட்டுமே விழுந்து கும்பிடவேண்டும். ஏனைய இடங்களில் விழுந்து கும்பிடுதல் ஆகாது ..

துவாதசியில் புடலங்காய் உண்ணுதல், பகல் தூக்கம், இருவேளை உண்ணுதல் ஆகாது ..

ஞாயிற்றுக்கிழமைகளில் எண்ணெய்க்குளியல் ஆகாது.

வீட்டு வாசலில் சூரியோதயத்திற்கு முன் கோலமிடுதல் ஆகாது. சுப காரியங்களுக்கு ஒற்றைக்கோடு கோலமும், அசுப காரியங்களுக்கு இரட்டைக்கோடு கோலமும் ஆகாது. வேலையாட்களைக் கொண்டு கோலமிடுதலும் ஆகாது ..

ஈர ஆடையுடனும், ஒரு உடையுடனும் வழிபாடு செய்தல் ஆகாது. உலர்ந்த ஆடை கிடைக்காதவிடத்து ஈர உடையை 'ஓம் அஸ்த்ராய பட் ..' என்று ஏழுமுறை கூறி, உதறி உலர்ந்ததாக பாவித்து உடுத்தி வழிபாடு செய்யவேண்டும்.

கோயில் மூடியிருக்கும்போதும், திருமஞ்சனம் கொண்டு பூஜை செய்யும்போதும் திரையிட்டிருக்கும்போதும் தரிசனம் செய்வது ஆகாது ..

உணவை இடது கையால் உண்ணவோ, மற்றவர்களுக்குக் கொடுக்கவோ ஆகாது. சிவலிங்கத்தை இடது கையால் தொடுதலும் ஆகாது ..

கன்றின் தலைக்கயிறைத் தாண்டுதல் ஆகாது. பிரதோஷகால பூஜைவேளைகளில் நந்திக்கும், சிவலிங்கத்திற்கும் இடையில் செல்லக்கூடாது ..

இரவு நேரங்களில் வேஷ்டி துவைத்தல், குப்பையை வெளியே கொட்டுதல், மரநிழலில் தங்குதல், பூமியை வெட்டுதல், கீறுதல், உழுதல் ஆகாது ..

உபவாச தினங்களில் அடிக்கடி நீர் அருந்தக்கூடாது. தாம்பூலம் போடுதல், பகல் உறக்கம் கொள்ளல், சண்டை செய்தல் ஆகாது ..

அமாவாசை, ஞாயிற்றுக்கிழமை, சங்கராந்தி நாட்களிலும், பிறப்பு இறப்புகளால் ஏற்படும் சூதக காலங்களிலும் வெந்நீரில் குளித்தல் ஆகாது ..

கிரஹண காலத்தில் கர்ப்பிணிப் பெண்கள் வெளியே வருதல் ஆகாது ..


புண்ணிய தீர்த்தங்களில் முதலில் காலை வைக்கக்கூடாது. முதலில் நீரை தலையில் தெளித்துக்கொண்ட பிறகே காலை நனைக்கவேண்டும். ஆடையின்றி நீராடுதல், நீரில் உமிழ்தல், ஜலமல விஸர்ஜனம் செய்தலும் கற்கள், குப்பைகளை போடுதலும் ஆகாது ..


*நன்றி.*


*ஷண் ரவிச்சந்திர குருக்கள்,*
*(பிரதம குருவும், சோதிடரும்)*
*அம்மன் வீதி, திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்*




# அரிய காட்சிகள்! ..







---

கார்த்திகையில் கலகலத்து, மார்கழியில் மனம்நிறைந்து நம் வீடெல்லாம் பக்தி வெள்ளம் பரவுகின்ற தெய்வீக தருணங்களில் இருக்கிறோம் ..


எத்தனையோ விரதங்கள், வழிபாடுகள், சமயக்கடமைகள்!! அத்தனையும் தந்த மாதங்களாம் கார்த்திகையும், மார்கழியும். அவற்றை வணங்கி வழியனுப்புவோம்.

இனியென்ன! அடுத்தது தை அல்லவா! அதுவும் மாதங்களின் தலைமகள்! தை பிறப்பதற்குமுன் வரவேற்கத் தயாராவோம் ..



வாழ்வில் ஒளியேற்றும்

# கார்த்திகை மாதம்! ..



கார்த்திகை ஒளிவெள்ளம்! ..

*"தம்பியிடம் கேள் .."*

*-- விநாயகரின் அறிவுரை*

கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்து தருவதற்கு கார்த்திகை மாதத்தைப்போல சிறந்த மாதம் இருக்கமுடியாது. அப்படியொரு இன்பம் அகமும், புறமும் நிறைந்து வழியும் ..

பூரணையானது கார்த்திகை நட்சத்திரத்தன்று வருவதால், இது கார்த்திகை மாதம் என பெயர் பெற்றது. இம்மாதத்தில் வருகின்ற கார்த்திகை நட்சத்திரமோ திருக்கார்த்திகை என்று பெயர் பெறுகிறது ..

திரிலோக சஞ்சாரியாகிய நாரதருக்கு புதிய எண்ணம் ஒன்று ஒருமுறை உருவானது. ரிஷிகளிலே சிரேஷ்டர்களாக விளங்கும் ஏழு முனிவர்களிலும் உயர்ந்த நிலையை தான் அடைவதற்கு விரும்பினார்.அதனால் பிள்ளையாரை அணுகி, ''பெருமானே, மேன்மையை அடையும்பொருட்டு எனக்கொரு விரதத்தை உபதேசித்தருளும் ..'' என்றார்.


மகாகணபதியும், '' நீ நமது தம்பியாகிய முருகனை வழிபட்டு, கார்த்திகைதின விரதத்தை அனுட்டித்து வா. பன்னிரண்டு ஆண்டுகள் முயன்று இதனை கடைப்பிடிப்பாயானால் உனது எண்ணம் ஈடேற தடையில்லை ..'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இதனால் அகமகிழ்ந்து நாரத மாமுனிவரும் பூவுலகம் வந்து சேர்ந்தார். விரதத்தையும் தொடங்கி பரணி நாட்களில் மட்டும் பகல்பொழுதில் ஒருவேளை உணவை ஏற்றார்.

*நாரத முனிவரின்*
*கார்த்திகை விரதம்*

கார்த்திகை நாட்களில் அதிகாலையில் நீராடி, தூய வெண்ணிற ஆடையணிந்து, எளிமையாக நித்திய கருமங்களை மேற்கொண்டார். வெறும் நீரையருந்தி, ஐம்புலனடக்கி, நாணல் புல்லாலான படுக்கையில் அமர்ந்து, ஆறுமுகப்பெருமானின் திருவடி நினைந்து உறங்காமல் இருந்தார். ரோஹிணி நாளில் நீராடியும், முருக வழிபாடு செய்துவரும் முனிவர்களோடு உணவருந்தியும் காலம் கழித்தார்.

நோன்பிருந்து உண்பவர்கள் அன்றைய பகல்பொழுதில் உறங்கலாகாது என்பதற்கேற்ப, பகல் முழுதும் உறங்காமலிருந்தார். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கார்த்திகை நோன்பை மேற்கொண்டு வந்த நாரதமுனிவர் தான் எண்ணியவாறே ஏழு முனிவர்களுக்கும் மேலான நிலையை அடைந்து மேன்மையுற்றார்.



## சிறந்தோங்கிய விரதாதிகள்!

உலகம் முழுவதையும் ஆண்ட முதலாவது மனு ஒரு அந்தணர் என்பதும், கார்த்திகை விரதத்தை மேற்கொண்டதால் அந்நிலைக்கு உயர்ந்தார் என்பதும் நூல்களில் உண்டு. திரிசங்கு மன்னனும் ஓர் அந்தணரே! இதே விரதத்தை நோற்று, நினைத்தவைகளனைத்தும் பெற்றார். ஓர் அரசனும், வேடனும் கார்த்திகை நோன்பை ஏற்று சிறப்புகள் பெற்ற சரிதமும் உண்டு.

முருகப்பெருமானை கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததனால் அவருக்கு கார்த்திகேயன் என்ற நாமமும் உண்டு.


## *எரிந்த எலும்புகள் அழகிய பெண்ணாக எழுந்து நடந்து வந்தது!*

திருமயிலையில் வாழ்ந்து வந்த சிவநேசச் செட்டியார் என்பவர் ஞான சம்பந்தப்பெருமான் திருவொற்றியூர் வந்திருப்பதாக அறிந்து வரவேற்கச் சென்றார். கமுகு, வாழை, தோரணங்களால் நான்கு மைல் தூரத்திற்கு அலங்கரித்து ''மயிலைக்கு எழுந்தருள வேண்டு'' மென்று ஞான சம்பந்தரை வேண்டினார்.

இந்நிலையில் ஒரு துயரமான நிகழ்ச்சி சிவநேசரின் வீட்டில் நடந்திருந்தது. அவரது ஒரே மகளாகிய பூம்பாவை விடந்தீண்டியதனால் இறந்திருந்தாள். தனது மகளை ஞானசம்பந்தருக்கு மணமுடிப்பதற்கு ஆவலாயிருந்தவர் அவர். இது ஊராருக்கும் தெரியும்.

காலமாகிவிட்ட தனது மகளின் தகனத்தின் பின்னர் எலும்புகளை குடமொன்றினில் இட்டு வீட்டில் வைத்து பூஜித்து வந்தார் சிவநேசர்.


இதனை அடியார் ஒருவர் மூலமாக அறிந்துவிட்ட ஞானசம்பந்தர் அக்குடத்தை கபாலீஸ்வரர் கோயிலுக்குக் கொண்டுவருமாறு பணித்தார். குடத்தைக் கொணர்ந்ததும் ஒரு பதிகம் பாடினார். ஒவ்வொரு பாட்டாக பாடி எலும்புகளை ஒன்றாக்கினார். ஒன்றாக இணைந்த எலும்புகள் பெண் வடிவம் பெற்றது.



சம்பந்தர் திருமணக் காட்சி

தனது பதிகத்திலே, *"மயிலையில் நடைபெறும் எத்தனையோ விழாக்களை காணாமல் பூம்பாவை போதல் சரியன்று .."* என்று பாடி எழுந்து நடந்து வரச்செய்தார்.

சம்பந்தப் பெருமான் தொடர்ந்து திருவாய் மலர்கையில், *"மங்கையர்கள் கொண்டாடி மேன்மையுறுவது கார்த்திகை விளக்கீட்டு விழா நாள் .."* என்றார். அதோடு பழங்காலம் தொட்டு இவ்விழா போற்றப்பட்டு வருவதால் ***"தொல் கார்த்திகை"*** என்கிறார். கார்த்திகை விளக்கீட்டு விழா பழம்பொரும் விழாக்களுள் ஒன்ற என்பது இதனால் தெரிகிறது.



கார்த்திகை ஒளிவெள்ளம்! ..



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

**இலவ மலர்களும், கார்த்திகை தீபமும் ஔவைப்பாட்டியை சொக்க வைத்தன ..**

சங்ககால கவிப்பாட்டியான ஔவையார் கார்த்திகை விளக்கீடு போல காட்சி தரும் இலவ மரங்களினால் பெரிதும் ஆனந்தமடைந்திருக்கிறார். அகநானூறு என்னும் பழம்பெரும் இலக்கிய நூலிலே கார்த்திகை விளக்கீட்டைப்பற்றிய குறிப்புகள் தித்திப்பு தரும்.

காட்டில் இலவ மரங்கள் குலுங்க பூத்திருக்கும்போது இலைகள் இருக்காது. பூக்கள் செந்நிறம் கொண்டவையாக இருக்கும். அப்போது மரத்தில் அடுக்கடுக்காக சிவந்த பூக்கள் அமைந்துள்ள இயற்கைக் காட்சி காண்போரை இன்பத்தில் ஆழ்த்தும். இதனை ரசித்த ஔவைப்பாட்டி கார்த்திகை விளக்கீட்டு விழாவுக்குச் சென்று, **"மகிழ்ச்சியால் திளைத்து ஆரவாரித்து இந்த விழாவைக் கொண்டாடும் மகளிர், கார்த்திகை நாளில் ஏற்றிவைத்த விளக்கு வரிசையைப்போல இலவ மலர்கள் அடுக்கடுக்காய் மலர்ந்திருக்கின்றன .."** என்று பாடுகிறார்.

**தலைவனைப் பிரிந்து வாடும் தோழியே! கார்த்திகை விழாவில் களிப்புற வா ..**

இலக்கியத்திலும் கார்த்திகை விளக்கீட்டின் பங்களிப்பு பரவிக்கிடக்கிறது ..


*"கார்த்திகை விழாவில் கலந்து மகிழ வா .."* என்று தலைவனைப்பிரிந்து வாடும் தலைவியை அவளது தோழி அழைக்கிறாள்.

மழைமேகங்கள் நீங்கிய கார்த்திகையின் மாலைக்காலம், நிறைமதி கார்த்திகை நாளில் **'குறுமுயல் மறுநிறம்'** கிளரத் தூண்டுகிறது.

தெருக்கள்தோறும் தோரணம் கட்டி மக்கள் வரிசையாக விளக்குகளை வைக்கும்போது, ஊரே விழாவில் களிக்கிறது. இப்படியான விழாவை *"ஊருடன் கூடிக்கொண்டாட வருக .."* என்று கணவனைப்பிரிந்து கவலைகொண்ட தலைவியின் சிந்தையை மாற்றும் வகையில் அழைக்கிறாள் தோழி.

*"மழைகால் நீங்கிய மாக விசும்பில்.."* என்கின்ற நக்கீரரின் பாடலில் வரும் வாக்கியங்களுக்கு இணையாக முக்கனிகளின் சுவையும் ஈடாகா ..

கார்த்திகை ஒளிவெள்ளம்! ..



**தானே தீப்பிழம்பாகிய திருமால்! ..**

அட்ட மங்களுக்குள் ஒன்றாகிய இவ்விளக்கின் சிறப்பை, இவ்விளக்கொளியோடு தொடர்பு படுத்திய சரிதமும் உண்டு. திருமால் பிரம்ம யாகத்தை அழித்து தாமே தீப்பிழம்பான விழாவாக இது அமைவதற்கும் பொருள் தருகிறது. புகழ்பெற்ற திருமால் அமிசம் பெற்ற அரசர்களைப் பாடும் முகத்தான் புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூல் **"விளக்கீட்டு நிலை"** என்னும் துறையால் பாராட்டுவதை அறிகிறோம் ..

தெய்வத்தை விளக்கில் இருத்தி வழிபடும் விழாவாக இதனை சைவர்கள் கொண்டாடினர். கார்த்திகை என்பதற்கு அழல் என்றும், எரி என்றும் பெயர்களுண்டு. **'அழல்சேர் குட்டம்'** என சிலப்பதிகாரம் கார்த்திகையை அழல் என்கிறது.

**'எரிகடை எழில் வேழம்'** என்னுமிடத்தில் பரிமேலழகர் எரி என்பதற்கு **'அங்கியை தெய்வமாக உடைய கார்த்திகை'** என்று பொருள் தருகின்றார்.


'கார்த்திகை விளக்கீட்டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார் ..' என்று ஒரு தொடர் ஜீவக சிந்தாமணியில் வருகிறது.

கார் நாற்பது 'நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கில் ..' என்று குறிக்கிறது. 'குன்றத்துச் சுடர்' என்றும் ஜீவக சிந்தாமணி குறிப்பிடுவதிலிருந்து இவ் விளக்கை மலைமேல் இடுவதும் வழக்கம் என்று தெரிகிறது ..

## அருணகிரியாக சிவபிரான்!

கார்த்திகைத் திங்கள் என்பது கூதிர்கால முடிவாக நிற்கிறது. அடைமழையில் வாடி, ஒடுங்கிக்கிடந்த மக்கள் நன்றாக உலவி தமது வாட்டத்தை நீக்கிக்கொள்ள கதிரவன் ஒளியைக் காண விரும்புவார்கள். அதனால் மலைமீது விளக்கிட்டு மகிழ்வதை கார்த்திகை விளக்கு குறிக்கிறதாம்.

சொக்கப்பனை கொளுத்துவதும் இத்தினத்திலே கவனிக்கத்தக்கது திருவண்ணாமலை மீதும், ஏனைய மலைகள் மீதும் விளக்கேற்றுவது பிரபலமானது. மலைகளின் உச்சியிலே கார்த்திகை விளக்கை கண்டு தொழுத பின்னரே உணவுண்பது சைவர்களின் விரத முறையாகும். ஒளிப்பிழம்பான சிவபிரான் அருணகிரியாக நின்று கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் மலைமீது காணப்படும் விளக்கை வழிபடுபவர்களுக்கு அருள்புரிவதாக பெரியார்கள் கூறுவார்கள்.




மூன்று நாட்களுக்கு மலைமீது இரவு பகலாக எரிந்துகொண்டிருக்கும் மகா தீபத்தின் சுடர் எண்பது மைல்கள் சுற்று வட்டத்திற்கு தெரியுமாம். திருவண்ணாமலை உச்சியிலே ஒரு பெரிய அண்டாவை வைத்து முழுவதுமாக நெய் விட்டு ஒருதொகை வெள்ளைத் துணியை அதில் நிரப்புவார்கள். பின்னர் பஞ்ச மூர்த்திகளை எழுந்தருளச்செய்து வீதிவலம் வரச்செய்வார்கள். பஞ்சமூர்த்திகள் பார்த்துக்கொண்டிருக்கையில் ஒரு வெடியை தீர்ப்பார்கள். அதனைத் தொடர்ந்து அண்டாவில் உள்ள சீலைக்கு நெருப்பு மூட்டுவார்கள்.




சொக்கப்பனை கொளுத்துவதென்பதும் அரிய தத்துவத்தைச் சொல்கிறது. இத்தினத்தில் சிவபெருமான் திரிபுர அசுரர்களை எரித்த நிகழ்வு கோயில்களிலே நடத்தப்படுகிறது. திரிபுரர்களாக சொக்கப்பனையை உருவாக்கி எரித்து விடுகிறார்கள். சிறுவர்கள் தமது கைகளில் சுள்ளிக் குச்சுகளை வைத்துக்கொண்டு அவற்றின் முனைகளில் தீயை வைத்து அதில் குங்குலியத்தை தூவி அதில் எரியும் தீயைப் பார்த்து குதூகலிப்பார்கள்.

கார்த்திகை மாதம் முழுவதுமாக மாலையில் விளக்கேற்றும் முறையும் ஒன்றுண்டு. காசியில் உள்ள கங்கைக் கரையில் இந்த வழக்கம் இப்போதும் இருக்கிறதாம். இப்படி தொடர்ந்து ஏற்ற முடியாதவர்கள் துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி என்ற மூன்று தினங்களிலாவது தீப வரிசைகளை ஏற்றவேண்டும் என்பதும் ஒரு முறை. நாகம், அரசமரம், சூரியன், தீபம் இவற்றையே முற்காலத்தில் பிரதான தெய்வங்களாக பூஜித்து வந்துள்ளனர். தீப வழிபாட்டில் சாதி சமய பேதம் இல்லாமல் எல்லோருமே வணங்குவர்.


**80 மைல் தொலைவில்
தெரியும் மகாதீப சுடர்!**

கார்த்திகை ,
ஒளிவெள்ளம்! ..

## மூன்று பிரிவாக விளக்கீடு!

## வீட்டு விளக்கீடு, குமாராலய தீபம், சர்வாலய தீபம் ..

வீட்டு விளக்கீடு, சர்வாலய தீபம், குமாராலய தீபம் என மூன்று பிரிவாக கொண்டாடுவார்கள். வீட்டிலும், வீட்டைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் ஏற்றி வணங்கும் தீபம் வீட்டு விளக்கீடு எனப்படும். முருகன் கோவிலில் ஏற்றி வழிபடுவதும், சொக்கப்பனை கொளுத்துவதும் குமாராலய தீபம் எனப்படும். முருகன் ஆலயம் தவிர மற்ற எல்லா ஆலயங்களிலும் தீபம் ஏற்றி சொக்கப்பனை கொளுத்துதல் சர்வாலய தீபம் எனப்படும்.




அகல், எண்ணெய், திரி, சுடர் என்ற நான்கும் சேர்ந்தாலே விளக்காகிறது. இவை நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு தத்துவத்தை உணர்த்துகின்றன. மோட்ச விளக்கு ஏற்றப்படுவதன் தத்துவமும் இதுவே. இவையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாதனங்கள். அனைத்திலும் அரிதானது அறிவே. ஆதலால் அறிவொளியைத்தான் தீபஜோதியாக வழிபடுகின்றோம்.

## விளக்கேற்றியதுதான் நாகரீகத்தின் முதலாவது வேலை!

நாகரீக வாழ்வில் அடி எடுத்துவைத்த மனிதனின் முதல்வேலை விளக்கேற்றுவதாக இருந்தது. முதலில் பனை ஓலைகளையும்,மரக்கட்டைகளையும் பயன்படுத்தி எரித்து, விளக்காக உருவாக்கினான். பிறகுதான் எண்ணெயைக் கண்டுபிடித்தான். காலப்போக்கில் தனது அறிவு முதிர்ச்சியால் கற்குழியிலும், சங்கிலும், கிளிஞ்சலிலும் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றினான்.

ஒளி என்பது இறைவனை நாம் கண்டுகொள்வதற்கான மார்க்கம் என்பது அன்றே உணர்த்தப்பட்டுவிட்டது. பண்டைய சைவர்கள் வழிபட்ட மும்மூர்த்திகள் சூரியன், சந்திரன், நெருப்பு இவைகள்தான்.

ஒலி, ஒளி இரண்டிலும் இறைவனை வணங்குதல் முக்கியமான தத்துவமாகும். ஓம் எனும் வேதம் ஒலியாகவும், சுடர் எனும் காட்சி ஒளியாகவும் நமக்கு கிடைக்கிறது ..




கார்த்திகை ஒளிவெள்ளம்!

அக்னி ஒன்றே பல தீபங்களாக விளங்குவதுபோல, சிவம் ஒன்றே பல மூர்த்தங்களாக விளங்குகின்றன. இராமலிங்க சுவாமிகள் 'ஒளியே சிவம் ..' என்றார். நாவுக்கரசு நாயனாரும் 'நல்லக விளக்கது நமச்சிவாயவே' என்று பாடினார்.

ஜோதிவடிவமான சிவபெருமான் தன்னை அடைந்தவர்களது அழுக்கைப் போக்கும் தீயைப்போல திகழ்கிறார். ஆன்மாக்களின் இருளை அகற்றி அக்கினி அருவமாகவும்,உருவமாகவும் விளங்குவதுபோல சிவபெருமானும் அருவமாகவும், உருவமாகவும் மிளிர்கிறார்.

சிவ சோதியை யோக வழியால் காணமுடியாத மக்கள் சரியைத் தொண்டுகளால் காண முயலவேண்டும். இதனை சிவாகமங்கள் கூறுகின்றன. திருவிளக்கிடுதல் சரியைத் தொண்டுகளில் ஒன்று. நமிநந்தி அடிகள், கலிய நாயனார், கணம்புல்லர் நாயனார் என்ற அடியவர்கள் திருவிளக்கேற்றியதால் முக்திப்பேறு பெற்றவர்கள்.




## சொக்கப்பனை

சொக்கனாகிய சிவபிரானையும், பனைமர மடலால் உருவாக்குவதையும் குறிக்கின்ற வார்த்தை சொக்கப்பனை என்றாகிறது. சுஷ்கப் பனை எனும் சொல்லும் சொக்கப்பனையாக வழக்கத்திற்கு வந்தது என்றும் சொல்கிறார்கள்.

இலக்கணத்தில் பனை மட்டையைக் குறிக்கும் செய்யுள் அடியொன்று வருகிறது. 'சுஃறென்னும் தண்ணீடேட்டுப்பனை' என்பதே அது. இந்த ஒலிக்கும், சொக்கப்பனைக்கும் சம்பந்தம் இருக்கும் என்று யூகிக்க இடமுண்டு.

## விளக்கில் உணரவேண்டியது

மடமான இருளை அகற்றும்வரை, சிவமான பொருள் தெரிந்திலது. இதனை விளக்கேற்றிப் பார்த்துணர்தல் வேண்டும். வீடாக உடம்பும், தகளியாக உள்ளமும், நெய்யாக உணர்வும், பொருளாக சிவமும் இருப்பது அப்போது தெரியும். மடம்பரும் உணர்வு பசுஞானம். மடம்படும் உணர்வு சிவஞானம்.

## நமக்கும், இறைவனுக்கும் தூதுவன் அக்கினி ..

அக்கினிக்கு இருக்கின்ற ஸ்தானம் மிகப் பெரியது. தேவேந்திரனுக்கு அடுத்தபடியான இடத்தை அது வகிப்பதாக இருக்குவேதம் பகர்கிறது. இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையில் ஒரு தூதுவனாக அக்கினி வர்ணிக்கப்படுகின்றது. மனித வாழ்க்கையில் நாகரீகம் தலைகாட்டியதே தீபமேற்றும் பழக்கத்திற்குப் பின்னர்தான்.

எனவே, இந்த யுகத்தை தீபயுகம் என்றுகூட அழைப்பார்கள். தங்கத்திலான விளக்குகளை ஏற்றும் வழக்கம்கூட இராமயண, மகாபாரத காவியங்களில் காணக் கிடைக்கின்றன ..

## கார்த்திகைமாத குருபூஜை தினங்கள் ..

01 -- கணம்புல்லர


02 -- மெய்ப்பொருளார்

03 -- ஆனாயர்

04 -- மூர்க்கர்

05 -- சிறப்புலியார்

06 -- ஆறுமுகநாவலர்



# ''நினைக்கமுடியாத மகானப்பா! ..''
# ''இந்த அளவுக்கு எதிர்பாக்கல ..''





## மன்னாரில்
# விவேகானந்தம் ..

மன்னார் நகரில் சற்று ஆர்வமாகவே அன்றைய தினத்தில் ஆதவன் உதித்துவிட்டான். கடும் மழைமேகங்களுக்குள் இருண்டு, நீருக்குள் கிடந்த ஊர் அன்று மட்டும் பொற்கிரணங்களால் பளபளத்துக்கொண்டிருந்தது எப்படி?

ஒரு ஆன்மீகத்து இனிப்பை நகருக்குள் ஊட்டியவாறு பொழுது விடிந்திருந்தது ..

கூடவே ஏகப்பட்ட தோரணங்கள், நந்திக்கொடிகள், வீதி அலங்கரிப்புகள் வேறு!

விடியற்கருக்கலில் மஞ்சள்நிற மங்கல சீருடைகளில் அறநெறி மாணவர்களும், ஆசிரியர்களும் சுற்றுக்கிராமங்களில் இருந்து புறப்பட்டு வந்து குவிந்துகொண்டிருந்தார்கள்.

இரவுமுழுவதும் நித்திரையின்றி உழைத்த தொண்டர்கள் இன்னமும்கூட கயிறுகளையும், கம்பு தடிகளையும் சுமந்துகொண்டு ஆங்காங்கே அலங்கரிப்பில் கவனமாய் இருந்தார்கள். வேலைக்களைப்பையும் மீறிக்கொண்டு எல்லோரிடமும் ஒரு ஆன்மீகப் பரவசம் புறப்பட்டுக்கொண்டிருந்தது.

நகருக்கு வருகை தந்து கொண்டிருந்த புதியவர்களுக்கு இப்படி இன்பமூட்டும் காட்சிகளோடு, கேள்விகளும் எழுந்தன ..

'எதற்கான விழாவோ .. ' என்று ஏறெடுத்தவர்களின் விழிகளில் சக்திமிக்க பார்வையோடு போஸ்டர்களில் தெரிந்த ஒருவரின் தோற்றத்தைக் கண்டதும் ஸ்தம்பித்தார்கள்.

''அடடா, இவர் சுவாமி விவேகானந்தர்! ..''

தொடர்ந்தும் ஊக்கமான உரையாடல்கள் கேட்கின்றன ..

'' சுவாமிக்கு இன்று ஏதோ விஷேசம் போல.. நினைக்கமுடியாத மகானப்பா ..''

'' அவருக்கு 150 வது பிறந்தநாள் இந்த வருஷத்தில .. அதனால முழு நாட்டிலேயும் கொண்டாடி வர்றாங்க .. பேப்பர்கள்ள வந்தபடிதான் .. ''

''இங்கயும் நாட்டுப்பக்கமெல்லாம் சிறப்பா செஞ்சவ .. இன்டைக்கு டவுண் விழா என்டதால இங்க செய்யினம் ..ஆனா இந்த அளவுக்கு எதிர்பாக்கல ..''

கிராம மட்டங்களில் சுவாமிஜியின் ஜனனதின நிகழ்வுகளை நடத்தியதில் அவ்வூர்க்காரர்கள் ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் விழாக்களை நடத்தி ஏற்கனவே பிரமிப்பூட்டியிருந்தார்கள்.

அடம்பன், பேசாலை, வட்டக்கண்டல், முசலி, தெட்சணாமருதமடு, இலுப்பைக்கடவை, இரணை இலுப்பைக்குளம், சன்னார், ஆண்டாங்குளம், நானாட்டான், திருக்கேதீஸ்வரம் என்ற வரிசையில் எழுச்சியான விழாக்கள் முன்னெடுக்கப்பட்டன. ஊர்வலங்கள், வீதி அலங்காரங்கள், விழா மண்டபங்கள், கலைநிகழ்ச்சிகள் என்று அங்கெல்லாம் மாதக்கணக்கில் நிகழ்ச்சிகள் நீண்டன. அக்கிராமத்து மக்கள் விவேகானந்தரை தமது சொந்தவீட்டுப் பிள்ளையாகவே கருதி மிக உரிமையோடு நிகழ்ச்சிகளுக்காக உழைத்திருந்தனர்.

பச்சை வண்ண வயல்வெளிகளும், கட்டுக்கரை வாய்க்கால்களும், 'டல்'லாக உலவிய கால்நடைகளும்கூட பல நாட்களாக விவேகானந்தரின் வீர மொழிகளை வீசிய ஒலிபெருக்கிகளால் தெம்பாக காட்சியளித்தன.

சற்றே வசதிக்குறைவான நிலையில் உள்ள பிரதேசங்களே இந்த அளவுக்கு அசத்தியிருந்தார்கள் என்றால், இப்போது நாம் காண்பதோ நகர விழா .. எப்படியிருக்கும்! ..

சற்றுமுன் வீதி அலங்கரிப்பைக் கண்ட அன்பர் ஒருவர் அசந்ததைப்போல ---

'இந்த அளவுக்கு எதிர்பாக்கல ! ..'

என்றுதான் சொல்லத் தூண்டுகிறது.







மன்னாரின் மத்திய பகுதியில் குடிகொண்டிருக்கும் வைரவரின்ஆலயத்திலிருந்து புறப்பட்டது சுவாமி விவேகானந்தரின் ஊர்வலம்.

நாடளாவிய அளவில் நடந்து வருகின்ற சுவாமிஜியின் ஜனன நிகழ்வுகளில் முக்கிய இடம் வகிப்பது நகர் பவனியே. அவரின் ஏறுநடையை நேரே பார்ப்பதுபோலவே இருக்கும் தொண்டர்கள் அவரை அழைத்துவரும் காட்சி.

இன்றும் அப்படித்தான் இருந்தது ..

வைரவரை வணங்கி ஆசி பெற்றுக்கொண்டு, அடியவர்தம் தோளேறி வெளிவந்து, ஆலய முன்றலின் கதிரொளியில் தன்னை அழகு பார்த்துவிட்டு, காத்திருந்த ரத ஊர்தியில் ஏறி சுவாமிஜி ஆரோகணித்த சமயத்தில் நெஞ்சமெல்லாம் ஒரு பூரிப்பு ஏற்பட்டது ..

கல்கத்தா மலைச்சாரல்களிலும், பம்பாய் அமெரிக்க துறைமுகங்களிலும், லண்டன் சிக்காகோ நகரங்களிலும், ஆங்கிலேயர்களை அசத்திய மேடைகளிலும், கப்பல் பயணங்களிலும் சுவாமிஜி காட்டிய கம்பீரம் இப்படித்தான் இருந்திருக்கும்!

இல்லாமலா மொத்த உலகமும் அவரது நடவடிக்கையில் மயங்கியது?

புறப்பட்டு விட்டது பவனி.

ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாகன நெரிசல்களின் தொல்லையின்றி நகர வீதிகள் ஓய்வில் இருந்தன. இதனை பயன்படுத்திக்கொண்டு விவேகானந்தரின் நகர்பவனியை மனமார கண்டுகளிப்பதில் மன்னார் மக்கள் ஆர்வமாய் இருந்தார்கள்.

இன்றைய நிகழ்விலே முழுச்சிறப்புக்கும் முக்கிய காரணமாக ஒருவர் பங்களித்துக் கொண்டிருப்பதை இங்கு கவனிக்க வேண்டும்.. இதோ .. மிக நீளமான ஊர்வலத்தின் மகுடமாக வருகிறார் பாருங்கள். இவர்தான் ..

சுவாமி சர்வரூபானந்த மகராஜ்! இலங்கை இராமகிருஷ்ண மிஷனின் தலைவர்.
நாடி வரும் உள்ளங்களின் ஆன்மீக தாகத்தை நீக்குகின்ற கருணையின் வடிவம்.

மன்னார் தொண்டர்களோடு விழாக்கண்டு மகிழ, தனது சீடர்கள் சகிதம் கொழும்பில் இருந்து வந்திருக்கிறார். என்ன அற்புதம்!!

சைவமும், தமிழுமே சுவாசமாக உழைத்து வருகின்ற மூத்தோர்கள் முன்னணியில் தலைமை தர, தொண்டர்களின் கருத்தான ஒழுங்கமைப்புடன், மஞ்சள் நதிகளாய் அறநெறியாளர்கள் அணிநகர, சுவாமிஜியின் எழுச்சி உரையும் இசையும் ஒலியெழுப்ப, சைவப்பெருங்குடியாம் மன்னார் மாந்தர்கள் வெள்ளமாய் பொங்கிய நகர்வலம் வந்துகொண்டிருந்தது.

முச்சந்திகளும், வீதி வளைவுகளும், பாதைகளும் வண்ணமயமான தோரணங்களை அணிந்துகொண்டு தாமும் விழாவை கொண்டாடின. வீரம், கருணை, கடமை, ஞானம் என்ற அரிய தத்துவங்களை தந்தவாறு பல இடங்களிலும் சுவாமிஜியின் பிரம்மாண்ட வர்ணப்படங்கள்!

சுவாமிஜியை சுமந்த ஊர்திகளின் அலங்காரத்தில் மிரண்டுபோன வாகனங்களும், ஆட்டோக்களும் சளைத்துவிடாமல் தம் பங்குக்கும் பேரணி தந்து பவனியின் சிறப்பை உயர்த்தின.


ஒருவாறு கடலை வந்தடைந்தது நதி.

சித்தி விநாயகர் இந்து தேசியப்பாடசாலை விழாவுக்கு தயாராக காத்திருந்தது. அதன் பெரும் வெளிவாசல் திக்கித்திணறி கூட்டத்தை உள்வாங்கி அனுப்பிக்கொண்டிருக்க, பெரும்பலத்தோடு ஏற்றுச் சுமந்தது விழாமண்டபம்..

பூரண கும்பமும் தீபமும் வரவேற்க, கொடியேறியை நந்தியை வணங்கிவிட்டு, பல்லக்கிலிருந்து இறங்கினார் விவேகானந்தப் பெருமான்.

மங்கள இசையால் மனங்கள் பூரித்தன. மங்கள விளக்கில் புத்தொளி பரவியது. அச்சொட்டாய் அடிவைத்து நிகழ்வுகள் புறப்பட்டன. உறங்கிக்கிடந்த இந்துக்களை கதிரையின் நுனிக்கு கொண்டுவந்த சிறப்புரைகள், இறுக்கம் தளர்த்தி இதம் தந்த கலை நிகழ்வுகள் என்று அங்கே இன்பம் கரைபுரண்டது.

கூடவே, சுவையாக பகலுணவும் உண்டு பசியாறி வீடேகியபோது மெய்வாழ்வு தெரிந்தது.

ஆரோக்கிய வாழ்வு

# நலம் தரும் யோகா

தொடர் -- 07

## 14. புஜங்காசனம்




செய்யும் முறை :

பயன்கள் :-

புஜங்கம் என்பது பாம்பு. பாம்பு படம் எடுப்பது போன்ற நிலையில் இருப்பதனால் புஜங்காசனம் என்று பெயர் கொண்டது. இதைவிட புயத்திற்கும் பலத்தைத் தருகிறது. கழுத்து பின்னோக்கி வளைக்கப்படுவதனால் மத்தியாசனம் போன்று மாற்றாசனத்திற்குறிய தன்மைகளும் இதற்குண்டு. வயிற்றின் சதைகள் இழுக்கப்படுவதனால் அங்கு இரத்த ஓட்டம் ஏற்படும். விலா எழும்புகள் பலமடையும். ஆஸ்துமா நோய் உள்ளவர்களுக்கும் நல்ல ஒரு ஆசனம். சாதாரணமானவர்கள் மூன்று தடவைகள் செய்யவும். நோயாளிகள் ஆசானின் ஆலோசனைப்படி அதிகமாக செய்யவும்.








## 15. சலபாசனம்

செய்யும் முறை :




தரையில் குப்புறப்படுத்து கைகளைப் பக்கவாட்டில் அடிவயிற்றோடு சேர்த்து வைத்து கால்கள் இரண்டையும் ஒட்டியபடி மூச்சை அடக்கிக்கொண்டு கால்களை உயரத்தூக்க வேண்டும். முழங்கால் மடியாமல் நேராக இருக்க வேண்டும். ஆரம்பத்தில் இது சிலருக்கு கடினமாகத் தோன்றினால், முதலில் ஒவ்வொரு காலாக தூக்கி பழகியபின் இரண்டு கால்களையும் சேர்த்துத் தூக்கலாம்.



## 16. தனுராசனம்

செய்யும் முறை :


விரிப்பில் குப்புறப் படுத்து, கைகளால் கால்களை இறுகப்பிடித்து இழுத்து படத்தில் காட்டப்பட்டதுபோல் வரவேண்டும். வில்போல் வளைக்கப்படுவதனால், தனுராசனம் எனப்பெயர் வைத்திருக்கிறார்கள். சமஸ்கிருதத்தில் தனு என்பது வில்.

பயன்கள் :-

முதுகெலும்பு வழியாக ஓடும் அத்தனை நாடி நரம்புகளும் புது இரத்தம் கிடைப்பதனால் உறுதியடைகின்றன. அஜீரணம், வயிற்றுவலி, வாய்நாற்றம், தொந்தி, வயிற்றுக்கொழுப்பு, மூல வியாதி என்பன நீங்கும். கணயம், ஆண் பெண் உறுப்புக்கள், கர்ப்பப் பை என்பன பலப்படும். இளமைப் பொலிவுண்டாகும். பெண்களின் கர்ப்ப பை சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

பலன்கள் :-

வயிற்றுப்பகுதி பலப்படும். பெருங்குடல், சிறுகுடல் இழுக்கப்பட்டு நன்கு வேலை செய்யும். மலச்சிக்கல் தீரும். அஜீரணம், வயிற்றுவலி, இடுப்புவலி நீங்கும். தொந்தி கரையும். முதுகெலும்பு நோய்கள் குணமாகும். பின்துடைப்பகுதி, பிருஸ்டபாகம் பெருத்தவர்கள் ஒரு நாற்காலியின் உதவியுடன் ஆரம்பத்தில் பழகலாம். மூன்று வேளையும் ஐந்து நிமிடங்கள் செய்துவர, சதைப்பிடிப்பு குறையும். தசை நார்கள் இலகும். மலச்சிக்கல் தீரும்.






# சுந்தரகாண்டம் படியுங்கள், சுபீட்சம் பெறுங்கள்! ..






சுகமான வாழ்வுக்கான வழிகள் நம் சமயத்தில் பல்லாயிரம் இருக்கின்றன ..



அவைகளிலே வாசிப்பே முதலிடம் பெறுகிறது. அறிவையும், ஆரோக்கியத்தையும் ஆனந்தத் தேனில் கலந்து தரவல்ல அரிய நூல்களும், காவியங்களும் நம்மிடையே குவிந்து கிடக்கின்றன.


அவைகளைத் தேடும்போதும், அவைகளில் தேடும்போதும் வளத்திற்கான கதவுகள் மிக இலகுவாக திறந்து வழிவிடுகின்றன. எது வேண்டுமோ அதை நூல்கள் வாயிலாக நிறைய தந்து சென்றுள்ளார்கள். அந்த வரிசையிலே சுபீட்சம் வேண்டுமானால் சுந்தரகாண்டத்தை தேடுங்கள்: அது உங்களுக்குக் கிடைக்கும் ..

ராமாயணத்தில் ஆறு பகுதிகள் இருந்தாலும் சுந்தரகாண்டத்திற்கு மட்டும் தனிச்சிறப்பு உண்டு. ஆண், பெண் இருபாலாருக்கும் நேருகின்ற அத்தனை துயரமும், மன அவலமும் இதிலே வருவதுபோல அவற்றிலிருந்து விடுபட கிடைக்கின்ற ஆதரவும், பராக்கிரமமும்கூட இதிலேயே கிடைத்து விடுகிறது. இதை வாசிக்கும்போது வாழ்க்கை அழகும், ஆனந்தமும் அடைவதை காணலாம்.

மனதில் கிடைக்கின்ற நம்பிக்கை மலைகளைக்கூட தகர்க்கும். ஆதலால் சுந்தரகாண்டத்தை தேடி வாசியுங்கள்.

மிக சிறப்பான பலன் அடையவேண்டுமானால் ..

அதிகாலையில் நீராடி, பிரம்ம முகூர்த்தமான 4.00 மணிக்கும் 5.00 மணிக்கும் இடையில் மன அமைதியோடு படிக்கவேண்டும். சுந்தரகாண்டத் தொடரை படித்து முடிக்கும்போது வாழ்க்கையில் பெரும் சாதனைக்கான மாற்றத்தை உணரலாம் ..





317 அடிகள் கொண்டது இப்பாடல். இதனை இயற்றியவர் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் தலைமைப்புலவராகிய நக்கீரர் பெருமான்.

புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் ஆற்றுப்படை எனும் துறையில் சிறு பாடல்களாக முதலில் அமைந்திருந்தன. ஆயினும், அதன் சிறப்பின் காரணமாக நெடும்பாடலாக வடிவெடுத்தது. பத்து பாடல்கள் கொண்ட சங்க இலக்கியத்தில் பாதி இடத்தை இது பிடித்து, ஐந்து பாட்டுக்கள் ஆற்றுப்படையாக அமைந்தன.

துன்பம் நீங்கி வாழ்வதே இன்பம். பொருட்செல்வம் இருந்தாலே அது சாத்தியம். அதுபோல இறப்புக்குப்பின் உள்ள மறுமை வாழ்வுக்கு அருட்செல்வம் இன்றியமையாதது. ஒரு வள்ளலிடம் சென்று பொருள் செல்வத்தை அடைய வழி சொல்வதும், அருள் செல்வத்தை அடைய உலகைக்கட்டியாளும் வள்ளலாகிய இறைவனிடத்தில் செல்வதற்கு வழிகாட்டுவதும் ஆற்றுப்படை பாடல்களாகும். பொருளுக்கு ஆற்றுப்படை இலக்கியங்களும், அருளுக்கு திருமுருகாற்றுப்படையும் அழைத்துச்செல்கின்றன.

இதற்கு முருகு, புலவர் ஆற்றுப்படை என்றும் பெயர்களுண்டு.

எவரிடத்தில் இருந்தும், எந்த மார்க்கமாகவும் பொருளை பெற்றுக்கொள்ளமுடியும். ஆனால் அருளை தெய்வத்திடம் இருந்து மட்டுமே பெற முடியும். அதனை அடைவதே மறுமை வாழ்வுக்கு முக்கியம் என்பதை உணர்த்துவதே இந்த நூலின் உயர்ந்த நோக்கம்.

இதனாலேயே முருகனிடமிருந்து அருள்பெற்ற ஓர் அரும்புலவனாகத் தோன்றி, மற்றவர்களுக்கு வழி சொல்வதாக நக்கீரர் ஆற்றுப்படையாக இந்நூலை இயற்றியுள்ளார் ..

ஞான நூல்கள்
நமக்காகவே! ..

# திருமுருகாற்றுப்படை





தனது பிரிய வாகனமாகிய தோகைமயில் மீதேறி, செக்கச்சிவந்த பேரொளியுடன் தோன்றும் முருகனை உலகம் எல்லாம் மகிழும்படியாக நீலக்கடலின்மேலே எழுந்து உதிக்கின்ற செங்கதிரோனின் தோற்றத்துடன் ஒப்பிட்டு நூலின் முதல் அடியை நக்கீரர் பெருமான் தொடங்குகிறார் ..

**உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு ... ( 1--2 )**

*( உவப்ப : மகிழ, வலன்ஏர்பு : வலப்பக்கமாச்சுற்றி, திரிதரும் : வலம் வரும் )*

இந்த நூல் ஆன்மீக ஆற்றுப்படையாக அமைந்து, ஆறுமுகனாகிய குமரனின் ஆறு படைவீடுகளுக்கும் சென்று அருள்பெற வழி காட்டுகிறது. அதற்கேற்றவாறு ஆறு பகுதிகளாகவும் திகழ்கிறது.

ஒவ்வொரு பாடல் வரிகளும் முருகப்பெருமானின் திவ்விய தரிசனத்தை எடுத்துக் கூறுகிறது. முருகனின் திருவுருவம், அவன் அணியும் அணிகலன்கள், ரசிக்கும் ஆடல் பாடல்கள், தெய்வ மகளிரது வாழ்த்துக்கள், சூரபத்மனை அழித்த வீரம் பற்றிப் பேசுகிறது.

ஆறுபடைவீடுகளின் சிறப்புகளே நூலின் முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன. அந்த வரிகளின் ஆழமும், விளக்கவுரைகளில் எழுதப்படுகின்ற தமிழும், நயமும் சொல்லில் அடங்காத சுவை கொண்டது : அமிர்தமாக பருகத்தக்கது.



இந்துக்களின் வாழ்வில் ஒளியூட்டும் நெறிகள் ..

# தர்ம சாஸ்திரம் ..03

பேராசையானது, அது போகத்தினால் அடங்குவது கிடையாது. அது அக்கினியில் ஊற்றிய நெய் போல வளரும். ஆகையால் பேராசையை அறவே மனதில் இருந்து ஒழிக்க வேண்டும்.

ஒருவன் தான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களைப் போக்க இஷ்ட மந்திர ஜெபம், அல்லது காயத்ரி ஜெபம் முடியும் மட்டும் செய்ய வேண்டியது. ஜெபம் செய்யும்போது வேறு சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கலாகாது.

காலையில் சூரிய உதயம் ஆகும் வரை நின்றுகொண்டும், மாலையில் சூரியன் அஸ்தமித்து நட்சத்திரங்கள் தெரியும் வரையில் உட்கார்ந்து கொண்டும் ஜெபம் செய்ய வேண்டியது. காலையில் கிழக்கு பார்த்தும், மாலையில் மேற்கு பார்த்தும் ஜெபிக்க வேண்டும்.

காலையில் நின்றுகொண்டு செய்யும் ஜெபத்தால் இரவில் செய்த பாவமும், மாலையில் உட்கார்ந்துகொண்டு செய்யும் ஜெபத்தால் பகலில் செய்த பாவமும் தொலைகிறது. இதை அனுபவத்தில் உணர முடியும்.

வீட்டில் வைத்து காயத்ரி அல்லது, இஷ்ட மந்திரம் ஜெபம் செய்தால் ஒரு பங்கு பலன். நதி தீரத்தில் ஜெபித்தால் இரு பங்கு பலன். பசுக் கொட்டகையில் ஜெபித்தால் நூறு பங்கு பலன்.

ஓமம் செய்யுமிடத்தில் ஜெபித்தால் ஆயிரம் மடங்கு பலன். தேவாலயங்களிலும், ஷேத்திரங்களிலும் இருந்து ஜெபித்தால் நூறாயிரம் மடங்கு பலன் ஏற்படும். இஷ்ட மந்திர ஜெபத்தைவிட காயத்ரி ஜெபம் சிறந்தது. தன் ஆசை காரணமாக எல்லா ஜெபத்தையும் கொஞ்சம் கொஞ்சம் செய்வதைவிட ஒரு குறிப்பிட்ட காயத்ரி மகா மந்திரத்தை பல லட்சம் செய்வது நற்பலன் தர வழி வகுக்கும்.

மான் தோலில் உட்கார்ந்து கொண்டு ஜெபித்தால் ஞானம் விருத்தியாகும். புலித்தோலில் உட்கார்ந்துகொண்டு ஜெபித்தால் மோட்ச சித்தியாகும். பெண் யானைத் தோலில் இருந்து ஜெபித்தால் கஷ்டம் நீங்கும். தர்ப்பையிலான ஆசனத்திலிருந்து ஜெபித்தால் மனக்குறை நீங்கும். மரத்தினாலான ஆசனத்திலிருந்து ஜெபித்தால் தேகத்திற்கு பலன் கொடுக்கும். பலா மர பலகை ஆசனத்திலிருந்து ஜெபித்தால் சுகந்தரும். இந்த ஆசனங்களை உபயோகிப்பவர்கள் சுயநலத்திற்கு ஜெபிப்பதைவிட பொது நலத்திற்கு ஜெபிக்கும்போது பல மடங்கு பலன் கிடைக்கிறது.

காயத்ரியை, அல்லது இஷ்ட மந்திர ஜெபத்தை குறைந்தது 27 தடவையாவது ஜெபிக்க வேண்டும். மேற்படி மந்திரத்தை வாயால் உச்சரித்து ஜெபிப்பது ஒரு மடங்கு பலன். சப்தமில்லாமல் ஜெபிப்பது 10 பங்கு பலன். உதடுகளை மட்டும் அசைத்து ஜெபிப்பது 1000 பங்கு பலன். புத்தியோடு ஒன்றி மனதுக்குள் ஜெபிப்பது எல்லையற்ற பலனைத் தரும்.

விரல்களால் எண்ணிக்கொண்டு ஜெபித்தால் ஒரு பங்கு பலன். விரல்களின் ரேகை வரியால் ஜெபித்தால் 10 பங்கு பலன். சங்கு மணிகளினால் ஜெபித்தால் 1000 பங்கு பலன். முத்துக்களை வைத்து ஜெபித்தால் பத்தாயிரம் பங்கு பலன். துளசி மாலையினால் ஜெபித்தால் அதன் பலனுக்கு அளவே இல்லை.

ஜெபம் செய்யும் முறைகளையும், வேதத்தையும், சாஸ்திரத்தையும் எவனொருவன் குருவுக்குத் தெரியாமல் ஓதுகின்றானோ அவன் வேதத்தை திருடிய பாவத்திற்கு ஆளாகிறான். அதனால் அவைகளை குரு மூலமாக அறிய வேண்டியது. அல்லது குருவை மானசீகமாக, குரு தட்சிணை அனுப்பிவிட்டு அவரின் ஆலோசனை பெற்று அதன்படி செய்யவேண்டும்.





தர்ம சாஸ்திரத்தை கேளாதவனுக்கும், தர்க்க வாதம் புரிபவனுக்கும், தர்மநிந்தனை செய்பவனுக்கும், அக்கிரமமாகக் கேட்பவனுக்கும், நாஸ்திகனுக்கும், சோதனை செய்பவனுக்கும், தர்மத்திற்கு விரோதமாக நடப்பவனுக்கும் சாஸ்திரத்தைக் கூறக்கூடாது. எவனொருவன் வேண்டுமென்றே தர்மத்தை அதர்மமாக சொல்கிறானோ, அவன் பொது மக்களின் வெறுப்பை விரைவில் சம்பாதிப்பவன் ஆவான்.

தர்க்கம், வேதாந்தம், தர்மம் ஆகிய சாஸ்திரங்களில் ஒன்றை எவரிடம் கற்றுக் கொள்வானோ, அவரை குருவாக எண்ணி முதலில் வணங்க வேண்டியது. அப்படி குருவாக ஏற்றுக் கொள்பவரை எக்காரணம் கொண்டும் குறை கூறக்கூடாது. அவர் வாயில் இருந்து வரக்கூடிய எந்தச் சொல்லும் சிஷ்யனின் நன்மைக்கு இருக்குமே தவிர, கெடுதல் நிச்சயம் இருக்காது. தன் குருபுத்திரன், பணிவிடை செய்பவன், தர்மத்தை அறிந்தவன், ஆபத்துக் காலத்தில் மதியூகமுள்ள மந்திரிபோல ஆலோசனை கூறுபவன், சொல்லித் தருவதை கிரகிக்கும் ஆற்றலுள்ளவன், பொய் சொல்லாதவன், தான தருமம் -- ஹோமம் -- யாகம் செய்பவன், உடன் பிறந்த சகோதரன் ஆகிய இவர்கள் வேதங்களை சொல்லவும், சாஸ்திரங்களை கற்றுக்கொள்ளவும் தகுதி உடையவர்கள். இதில் ஜாதி, மதம் குறுக்கே நிற்காது.

**(இன்னும் இருக்கிறது .. )**

**நன்றி :- "தர்மசாஸ்திரம்' நூல்**





# தெய்வீக பிரசங்கம் ..


தருகிறார் ..

***சிவஸ்ரீ சிதம்பரலக்ஸ்மி திவாகர குருக்கள்***
*ஸ்ரீ ஆதி விநாயகர் ஆலய பிரதமகுரு*
*வைரவப்புளியங்குளம்,*
*வவுனியா*




## நாரதரின் சங்கடம்

ஸ்ரீரங்கநாதப்பெருமான் ஆதிசேஷனில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தபோது ஒருநாள் அவ்வழியாக நாரதர் வந்தார். வழக்கம்போல 'நாராயணா, நாராயணா..' என்று ஆனந்தமேலீட்டால் குரல் தந்தார்.

''என்ன நாரதா, இன்று வழக்கத்தைவிட அதிக மகிழ்ச்சியில் இருக்கிறாய்? ..'' -- கேட்டார் மகாவிஷ்ணு.

''அதில்லை பிரபோ! தங்கள் நாமத்தை சொல்லும்போது சந்தோஸம் தானாகவே வந்துவிடுகிறது .. நான் என்ன செய்யட்டும் ..'' என்றுகூறி வணங்கினார்.

புன்னகை பூத்து சயனித்தவாறே உரையாடிய அரங்கனிடம் நாரதர் சட்டென்று ஒரு கேள்வியை கேட்டார்,

''பெருமானே, நெடுநாளாய் எனக்கொரு சந்தேகம். இன்றாவது அதனை தங்களிடம் வெளியிடலாமா ..'' என்றவாறு பகவானின் உத்தரவுக்காக காத்திருந்தார். பெருமானும் அனுமதிக்கும் பாணியில் தலையசைக்கவே நாரதர் தொடர்ந்தார், '' ஓம் நமோ நாராயணா என்று உயிர்களெல்லாம் தங்கள் நாமத்தை எப்போதும் கேட்க ஆசைப்படுகிறார்களே! இதனால் அவர்கள் அடையும் பயன் என்ன? ..''



அடக்கி வைத்திருந்த நீண்டநாள் பிரச்சினையை ஒருவாறு இன்றாவது வெளியிட்ட நிம்மதியில் மூச்சு விட்டார் நாரதர்.

சற்றே மலர்க்கண்களை மூடி சில விநாடிகள் இருந்துவிட்டு பகவான் மொழிந்தார் ..

'' நாரதா, இதற்கான பதிலை அனுபவ மூலமாக நீ தெரிந்து கொண்டால் நல்லது என நினைக்கிறேன் .. ஆகையால் நீ பூவுலகம் சென்று அங்கே சேற்றில் நெளிந்துகொண்டிருக்கும் ஒரு மண்புழுவிடம் ' ஓம் நமோ நாராயணா ..' என்று கூறு ..'' என்று கூறி சயனமானார்.

நாரதரும் உடனேயே புறப்பட்டு பூவுலகம் வந்து சேர்ந்தார். தனது சந்தேகத்திற்கான விடை கிடைக்கப்போகிறது என்பதால் அவருக்கு ரொம்பவும் உற்சாகம் வந்துவிட்டது.

பெருமான் சொன்னவாறே ஒரு இடத்தில், சேற்றில் மண்புழு நெளிந்துகொண்டிருந்தது. அதன் அருகில் சென்று காதில் விழும்படியாக ''ஓம் நமோ நாராயணா ..'' என்று உச்சரித்தார். அடுத்த கணமே நாரதர் அதிர்ச்சியடைந்தார். ஏனெனில் அந்த மண்புழு உடனே இறந்துவிட்டது.


இதனால் திகைத்துப்போன நாரதர் விரைவாக வைகுண்டம் திரும்பிச்சென்று நடந்ததை ஸ்ரீரங்கநாதரிடம் கூறினார்.




மண்புழுவுக்கு நடந்ததை நாரதர் கூறியதும் ''அப்படியா! .. சரி பரவாயில்லை. நீ மீண்டும் திரும்பிச்செல். பூவுலகத்தில் ஒரு பட்டாம்பூச்சி பூவிலே தேன் குடித்துக்கொண்டிருக்கிறது. அதனிடம் 'ஓம் நமோ நாராயணா ..' என்று காதில் விழும்படியாக கூறு ..'' என்றார்.

நாரதரும் கொஞ்சம் தயங்கிய நிலையில் பூவுலகத்திற்குத் திரும்பி வந்தார். பகவான் சொன்னதுபோலவே அங்கே ஒரு பட்டாம்பூச்சி தேன் குடித்துக்கொண்டிருந்தது.

மெதுவாக சென்று அதன் காதில் '' ஓம் நமோ நாராயணா ..'' என்று சொன்னார். அவ்வளவுதான். அடுத்த நிமிடம் அந்த பட்டாம்பூச்சியும் இறந்தது.



நாரதருக்கு மறுபடியும் அதிர்ச்சியால் கைகால் ஓடவில்லை. வந்த வேகத்திலேயே வானுலகிற்கு திரும்பிச் சென்றார். பெருமானின் நாமத்தால் சிறப்புகளை எதிர்பார்த்திருந்த நாரதருக்கு மரணங்களே காட்சி தருவதால் நன்றாகவே அதிர்ந்துவிட்டார். வரவேற்ற பகவானிடம் பட்டாம்பூச்சியும்



''அடடே, அப்படியா நாரதா! இருக்கட்டும் .. நீ மறுபடியும் ஒரு தடவை சென்று, அங்கே ஒரு பசுங்கன்று தாய்ப்பசுவிடம் பால் குடித்துக்கொண்டிருக்கும். அதனிடமும் என் நாமத்தை ஒலிக்கச் செய் .. '' என்று புன்னகைத்தவாறே பெருமாள் கூறினார்.

ஆனால் இந்த முறை நாரதர் பூலோகம் செல்ல ரொம்பவே தயங்கினார். அங்கே சென்று பகவானின் நாமத்தை ஓதும்போதெல்லாம் இறப்பு நிகழ்கிறதே! இது பெருமானின் புகழுக்கு அபகீர்த்தி அல்லவா ..

ஆயினும், சுவாமியின் கட்டளையை மீற முடியுமா?

''ஆகட்டும்! சென்று வருகிறேன்..'' என்று முணுமுணுத்துக்கொண்டு பூவுலகம் வந்தார். பசுங்கன்றை கண்டார். நாமத்தை சொன்னார். அந்தோ, அதுவும் இறந்தது.

அழாத குறையாக வந்த நாரதரிடம் பகவான், '' சரிசரி, கவலைப் படாதே .. மறுபடியும் நீ சென்று .. '' என்பதற்குள் --


'' ஐயோ பெருமானே, ஆளை விடுங்கள். எனது சந்தேகம் தீரா விட்டாலும் பரவாயில்லை. உயிர்கள் பறிபோவது இதோடு நிற்கட்டும். அதுவும் தங்களின் திவ்விய நாமத்தால் இது வருகிறதென்றால் அதை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. மன்னித்துவிடுங்கள் ..'' என்று அழவே ஆரம்பித்துவிட்டார் நாரதர்.



அவரைத் தேற்றுவது பெருமானுக்கு பெரும்பாடாய் போய்விட்டது.

''இதோ பார் நாரதா .. நான் சொல்வதைக்கேள். இம்முறை பூலோகத்தில் நீ அரசன் ராஜபாண்டியனிடம் செல்கிறாய். அவன் தனது மகனுக்கு மகுடாபிஷேகம் செய்கிறான். அந்த விழாவில் இளவரசனின் காதில் 'ஓம் நமோ நாராயணா ..' என்று சொல்லிவிடு. இது என் கட்டளை ..'' என்று கண்டிப்பாக கூறினார் பெருமான். நாரதரும் தள்ளாடியவாறு அந்த விழாவுக்கு வந்து சேர்ந்தார். அங்கே அவருக்கு நடந்ததை அடுத்த 'விஜயத்தில் ' அறியும்போது ஆச்சரியப்படுவீர்கள் ..

(தொடரும் ..)



# ஸ்ரீமத் பகவத் கீதை 07


## -- பாரதியார் உரை --

தொகுத்து, தொட்ராக தருபவர் :
வெ. திருச்செல்வம்





மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் விருப்பமுண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது. 62



சினத்தால் மயக்கம், மயக்கத்தால் நினைவுத் தவறுதல், நினைவுத் தவறுதலால் புத்தி நாசம். புத்தி நாசத்தால் அழிகிறான். 63

விழைதலும், பகைத்தலுமின்றித் தனக்கு வசப்பட்ட புலன்களுடன் விஷயங்களிலே ஊடாடுவோனாய்த் தன் விதிக்குத் தான் உட்பட்ட மனிதன் ஆறுதலடைகிறான். 64

சாந்தி நிலையில் மனிதனுக்கு எல்லாத் துன்பங்களும் அழிகின்றன. சித்தம் சாந்தி பெற்றபின் ஒருவனுடைய புத்தி விரைவிலே நிலைப்படுகிறது. 65

யோகமில்லாதவனுக்குப் புத்தியில்லை. புத்தியில்லாதவனுக்கு மனோபாவனையில்லை. மனோபாவனையில்லாதவனுக்கு சாந்தியில்லை. சாந்தி இல்லாதவனுக்கு இன்பமேது? 66





இந்திரியங்கள் சலிக்கையில் ஒருவனுடைய மனமும் அவனைப் பின்பற்றிச் செல்லுமாயின், அம்மனம் கடலில் தோணியைக் காற்று மோதுவது போல அறிவை மோதுகிறது. 67

ஆதலால், பெருந்தோளாய், யாங்கணும் விஷயங்களினின்றும் இந்திரியங்களைக் கட்டவல்லான் எவனோ, அவனறிவே நிலை கொண்டது. 68

எல்லா உயிர்களுக்கும் இரவாகிய நேரத்தில், (தன்னைக்கட்டிய) முனி விழித்திருக்கிறான். மற்ற உயிர்கள் விழித்திருக்கும் நேரமெதுவோ அதுவே முனிக்கிரவு. 69

கடலில் நீர்த்தொகுதிகள் வந்து விழுகையில் அது மென்மேலும் நிரப்புவதற்குறியதாய் அசையா நிலை கொண்டிருப்பது போலே, விருப்பங்கள் தன்னுள்ளே புகும்போது இயல்வான் எவனோ அவன் சாந்தியடைகிறான். விருப்பங்களை விரும்புவோன் அதனை அடையான். 70





இச்சையற்றான் எல்லா இன்பங்களையும் துறந்தான், என தென்பதற்றான், யானென்பதற்றான். அவனே சாந்தி நிலை அடைகிறான். 71

பார்த்தா, இது பிரம்ம ஸ்திதி இதையடைந்தோன் பிறகு மயங்குவதில்லை. இறுதிக் காலத்திலேனும், இதில் நிலை கொள்வோன் பிரம்ம நிர்வாண மெய்துகிறான். 72

**இங்கனம் உபநிஷத்தும், பிரம்ம வித்தையும் யோக சாஸ்திரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்பாஷனையுமாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில் ''ஸாங்கிய யோகம் '' என்ற இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.**

## 3 -- '' கர்ம யோகம் ''

கர்ம யோக ஞான யோகங்களுள் ஞான யோகமே கடுகப் பலனை அளிக்குமென்றாலும், கர்ம யோகமே செய்யத்தக்கது. ஆக்கையிருக்கும் வரையில் மனிதனுக்கு ஏதாவதொரு தொழிலைச் செய்வதே இயற்கை யாயிருக்கும். அவன் துணிந்து வேறு துறைகளிழந்த போதிலும் புலன்கள் அவனை இழுத்துச் செய்கையிலேயே கொண்டு வந்து நிறுத்தும். இந்திரியங்களை அடக்கி ஞான நிலையில் நிற்கும் திறமை வாய்ந்தவனும் கர்மங்களையே செய்யக் கடவன். ஏனெனில் இவன்து உண்மை நிலையறியாத பாமரர்களும் இவனைக் கண்டு தாங்களும் கர்மங்களை விட்டு ஞானத் துறையில் துணிவுறுவார்கள். ஆதலால் அவர்கள் கர்ம யோகத்தை இழந்து முன்னிலும் தாழ்ந்த நிலைக்கு வந்து விடுவார்கள். அவர்கள் கெடுவற்கு இவனே காரண-மாவான். ஆகையால் ஞான யோகத்தில் திறமையுள்ளவனுக்கும், திறமையில்லாதவனுக்கும் கர்ம யோகமே மேலானது. கர்மங்களை செய்யும் போது '' இந்நிலை எனக்கு பிரகிருதி சம்பந்தத்தால் வந்தேறியதென்றும் ஈசுவரனுடைய கட்டளையினால் அவனுதவியைக் கொண்டு அவனுடைய பிரீதிக்காகவே செய்கிறோம்.'' என்றும் எண்ணிச் செய்ய வேண்டும்.



### அர்ஜுனன் சொல்கிறான் :-

ஜநார்த்தன, செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்ததென்பது நின் கொள்கையாயின் இந்த கொடிய செய்கையில் என்னை புகுத்துவதென்னே, கேசவா? 01

குழப்பமான பேச்சினால் என் புத்தியை மயங்கச் செய்கிறாய். ஆதலால் எது எனக்கு நன்மை தருமென்பதை உறுதிப்படுத்தி ஒரே வார்த்தையாய் சொல். 02



(தொடர்ந்து வரும், மெய்சிலிர்க்க வைக்கும் ..)



# சைவ உலகில்
# அரிய நூல்கள்



உலகாளும் ஈசனுடன் தோன்றிய உமையம்மையிடம் ஞானப் பாலேற்ற பாலகனாய், ஞான சம்பந்தர் தனது மூன்றே வயதில் உதிர்த்த இந்தப் பதிகத்தை அறியாதார் இருப்பரோ ..


இதில் ததும்பும் பக்திக்கு இணையேது ..

அந்தத் தமிழின் சுவைக்கு ஈடுதானேது ..




**தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்**
**காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளம் கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள் செய்த**
**பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே**

தலம் : பிரமபுரம் (சீர்காழி) , பண் : நட்டபாடை



விளக்கவுரை :-

காதில் தோடணிந்து, இடப வாகனத்தில் ஏறி, பிறைச் சந்திரனைச் சூடி, காட்டுச் சாம்பரைப் பூசி, என்னுள்ளத்தைக் கவர்ந்த கள்வன், இதழ்களையுடைய தாமரை மலரில் இருக்கும் பிரம்மன் முன்னாளில் பணிந்து வணங்க, அருள் செய்த பெருமை மிக்க பிரம்மாபுரத்தில் இருக்கும் பெருமான் இவனே!



பாரெங்கும் நிலைகொண்ட இறைவனின் தலங்களை நோக்கி சம்பந்தரின் பாதங்கள் நகர்ந்தன. கூடவே பத்தும், நூறுமாய் பதிகங்கள் பிறந்தன.

திசைகளும், தரணியும் காதுகளைத் தீட்டியவாறு திகட்டாமல் தமிழைச் சுவைத்தன ..

கூன் பாண்டியனின் வெப்புநோயை நீக்குவதற்காகப் பாடியது இதுவாம் ..





**மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்திலு ள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே**

தலம் : திருவாலவாய் , பண் : காந்தாரம்

விளக்கவுரை : -

நினைப்பதைச் சிந்திக்கவைக்கும் மந்திரமாய் இருப்பது திருநீறு; தேவர்களுக்கும் மேலானது திருநீறு; அழகாயிருப்பது திருநீறு; வணங்கப்படத்தக்கது திருநீறு; வேதமாயிருப்பது திருநீறு; சைவ சமயத்தின் உண்மைப் பொருளாயிருப்பது திருநீறு; சிவந்த பவளம்போன்ற வாயையுடைய உமாதேவி பகராகிய திருவாலவாய்ப் பெருமானின் திருநீறே அது.


தலங்கள்பல சம்பந்தப் பெருமானின் வருகையால் புதிதாய் சரித்திரப்பொலிவு பெற்றன. ஈசனின் வாசஸ்தல மூர்த்தங்களுடன் கூடிய பெருமையோடு பாடல் பெறும் தலங்களாகவும் அணிசேரக்கண்டன. திருமருகல் தலத்திலே ஒலித்த இவரது பதிகத்தால் பாம்பு தீண்டி இறந்த மனிதம் உயிர் பெற்றெழுந்த காட்சி அனைவரையும் திகைக்கச்செய்தது ..



**சடையாய் யெனுமால் சரண்நீ யெனுமால்**
**விடையாயெனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவளுண் மெலிவே**
தலம் : திருமருகல் , பண் : இந்தளம்

## விளக்கவுரை :-

நீரோடைகளில் குவளை மலர்கள் மலரும் திருமருகலில் இருக்கும் பெருமானே! தன்காதலன் இறந்ததால் உன்னைத் தொழுது, சடையவனே என்கிறாள்: நீயே அடைக்கலம் என்கிறாள். விடையவனே என்கிறாள் மயங்கி விழுகிறாள். இவள் இப்படி உள்ளம் வருந்துதல் தகுமோ?



சோதி மயமான சிவபெருமானே சம்பந்தருக்கு உற்றாரும் பெற்றோருமாயிருக்க, திருமண பந்தத்திலும் பெருமானையே சரணடைய வேண்டுமென்பதே அவரின் பேறு. அவ்வாறே தமது மணநாளின்போது தோன்றிய சோதினுள் புகுந்தார். அப்போது பாடிய பாடல் இது ..

**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**யோதுவார் தமை நன்நெறிக்கு ய்ப்பதும்**
**வேத நான்கினு மெய்ப்பொருள் ஆவது**
**நாதனாம நமச்சிவாயவே**

## விளக்கவுரை :-


சிவபெருமானின் மீது அன்பு கொண்டு உள்ளம் கசிந்து, ஆனந்தக் கண்ணீர் வடிய ஓதுபவர்களை முக்திநெறியில் சேர்ப்பது, நான்கு வேதங்களின் மெய்ப்பொருளாய் இருப்பது, சிவபெருமானின் பெயராக விளங்கும் நமச்சிவாயவே ஆகும்.


நன்றி : "பஞ்சபுராண தோத்திரத் திரட்டு" நூல்
நன்றி : கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்.
( நூலின் தொகுப்பாசிரியர்)


*வாசிப்பு இன்பம் தொடரும்..*

# அறிவியல் தரும் சமயம்! ..

## உலகத்தில் முதலாவது இரட்டைக் குழந்தைகள் யார் என்று தெரியுமா?



ஒருமுறை வியாழ பகவான் தேவலோகத்தின் வழியாக வந்துகொண்டிருந்தார்.

ரம்பை, ஊர்வசி ஆகிய இருவரும் தேவகுரு வருவது தெரியாமல் நடனமாடிக்கொண்டிருந்தனர். இதனால் கோபமடைந்தார் வியாழ பகவான். சாபமும் கொடுத்தார் ..

''நீங்கள் இருவரும் பூந்துறை என்னும் நாட்டில், முக்தி என்பவளான தாசியின் வயிற்றில் இரட்டைக் குழந்தைகளாகப் பிறக்கக்கடவது ..''

அறியாமல் செய்த தவறினால் தேவகுருவின் சாபத்திற்கு இலக்காகி இருவரும் வருந்தினார்கள். சாப விமோசனம் வேண்டி அழுதார்கள்.



ரம்பையும், ஊர்வசியும் ..

மனமிரங்கி மன்னித்த வியாழன் ''நீங்கள் பன்னிரண்டு வயதுவரை அந்த தாசியின் வீட்டில் பார்வதி தேவியை வழிபட்டு வாருங்கள். அப்போது நீங்கள் வாழ்கின்ற நாட்டின்மீது தேவேந்திரன் ஐராவதத்தில் ஏறிவந்து பொன்மாரி பொழிவான். அப்போது உங்களின் சாபம் நீங்கும் ..'' என்று கூறினார். அவ்வாறே தாசி முக்தியின் வயிற்றில் பிறந்த ரம்பையும், ஊர்வசியும் அழகிலும், குணத்திலும் சிறந்து சிறுநல்லாள், பெருநல்லாள் என்னும் பெயரோடு வளர்ந்தார்கள். உரிய நேரத்தில் விமோசனமும் பெற்றார்கள். இவர்களே உலகின் முதலாவது இரட்டைக் குழந்தைகளாம் ..

---



## மஞ்சளின் மகிமை அறிவியலுக்கு புதுமை!

மஞ்சள் என்பது இந்துக்களின் பண்பாட்டில் ஒரு முக்கிய பொருள். மங்களகரமான நிகழ்ச்சிகள் அனைத்திலும் மஞ்சளுக்கு சிறப்பிடம் உண்டு. மஞ்சள் தேய்த்து குளிப்பது, பூப்புனித நீராட்டு, திருமணம், புதுமனை புகுவிழா எல்லாம் மஞ்சள் இல்லாமல் நடக்காது.

மஞ்சள் கிழங்கை உடைத்து எலுமிச்சம்பழச்சாற்றில் ஊற வைத்து, உலர்த்தி பொடியாக்கினால் குங்குமம் கிடைக்கிறது. இதனை நெற்றியில் அணிகிறோம். தலை வகிட்டு முனையிலும், புருவ மத்தியிலும் இடுகிறோம். இந்த ஆன்மீக செயலில் கிடைக்கின்ற பலனை அறிந்தபோது விஞ்ஞான உலகம் திகைத்தது.

காரணம், நெற்றிக்கண்ணாக மனிதனுக்கு விளங்கும் இடத்திலேயே நாம் மஞ்சள் குங்குமத்தை வைக்கிறோம். அந்த இடத்தில் குளிர்ச்சி தேவை என்பது நம் சமயத்தில் சொல்லியிருந்ததை தற்கால அறிவியல் ஏற்கிறது.

நெற்றியின் புருவ மத்திக்குப் பின்னால் 'பினீல் க்லான்ட்' என்னும் நெற்றிக்கண் சுரப்பி அமைந்திருக்கிறது.இது மூளையின் முக்கிய பகுதியென அறிவியலாளர்கள் அறிந்துள்ளனராம். இப்பகுதி சக்தி குவியும் இடமாகும். இந்த இடத்திலே குவியும் சக்தியின் உதவியால்தான் எத்தனையோ கண்டுபிடிப்புகளை மனிதன் உருவாக்குகிறான். ஆன்மாவை நம் அறிவு சந்திப்பதும் இந்த இடத்தில்தான் ..



# பூமிக்கருகிலேயே ..

மிக அருகிலேயே உறைகிறார்
பெருமான்.
நம் உள்ளே வேண்டுமா?
இருக்கிறார்.
வெளியே வேண்டுமா?
கிடைக்கிறார் ..
சற்றே விண் நோக்கிப்
பார்த்தால் ..
இதோ, அவரின் வதனம்
தெரிகிறது.
கண், மூக்கு, அதரம்,
நெற்றிக்கண், காதில்
குண்டலங்கள் அனைத்தும் மிக
தெளிவாக தெரிகிறது ..
பிரம்மாண்டமாக,
மிக பிரம்மாண்டமாக அவர்
இருக்கிறார்.அதனால்தான் சிறு
உருவமாக்கி அவரை பார்ப்பது
நமக்கு சாத்தியமில்லாமல்
இருக்கிறது. .. ஒருவேளை நாம்
பலஆயிரம் கோடி மைல்கள்
பின் தள்ளிப்போய் பார்த்தால்
இன்னும் நன்றாய் தெரிவார்..



இந்த அகண்டாரப் பெருவெளியில்
நிறைந்துள்ளவருக்கு அடி எங்கே, முடி
எங்கே என்று புராணத்தில்கூட தேடிக்
களைத்தனரே.. என்ன அறியாமை!
அவர் அநாதியானவர், அகண்டமானவர்,
காலத்திற்கும், திசைக்கும் கட்டுப்படாதவர்!

சூரியனும், கோள்களும், விண்மீன்களும்
கூட அவரின் எல்லைகளை அறியா.
வெறும் நிலத்திலிருந்து தலையில் முட்டும்
வானத்தை பார்க்கும் மனிதனா அறிவான்?
..
ஆனால், அவர் அருகில் .. மிக மிக
அருகில் .. இதோ நன்றாகத் தெரிகிறார்!

# சொர்க்கம் வேண்டுமா?

குறுக்கு வழி இதோ ..




ஒரு ஊரில் ஒரு கருமி இருந்தான். மற்றவர்களுக்கு உதவுவது என்றால் 'அது எப்படியிருக்கும்? ..' என்று கேட்கக்கூடிய ஆள்.

ஒருநாள் அவன் இறந்துவிடவே எமதூதர்கள் அவனை கொண்டு சென்று எமதர்மராஜனின் முன்னால் நிறுத்தினார்கள்.

அவனை ஏறெடுத்த தர்மராஜனும், ''இவனின் பாவ புண்ணியங்கள் என்ன? பூலோகத்திலே இவன் செய்த நற்காரியங்கள் உளதா? ..'' என்று சித்திரகுப்தரை வினவினார்.

சித்திரகுப்தரும் அவனது ஏட்டைப் புரட்டிப்பார்த்துவிட்டு தலையைச் சொரிந்தார்.

''பிரபோ, இவன் எந்த நற்காரியத்தையும் செய்யவில்லை. மாறாக கருமித்தனத்தால் மற்றவர்களைத் துன்புறுத்தியுள்ளான். எனவே சொர்க்கத்தில் இருப்பதற்கு இவனுக்கு தகுதியில்லை. ஆயினும் ..'' என்று சித்திரகுப்தர் இழுக்கவே ..

''ஏதோ சொல்ல நீர் தயங்குவதாக தெரிகிறது. அது என்ன? ..'' என்று கேட்டார் எமதர்மராஜன்.

''ஆமாம் பிரபோ, அது என்னவெனில் ஒருமுறை ஒரு வழிப்போக்கனுக்கு தர்மவான் ஒருவரின் வீட்டிற்குப் போகும் வழியை இவன் தனது சுட்டுவிரலால் காட்டியிருக்கிறான். அவ்வளவே இவன் செய்த நன்மை ..'' என்றார் சித்திரகுப்தனார்.

''அப்படியானால் இவனது சுட்டுவிரலை மட்டும் சொர்க்கத்தைத் தொட அனுமதித்துவிட்டு பிறகு இவனை நரகத்தில் போட்டுவிடுங்கள் ..'' என்று உத்தரவிட்டார் எமன்.

அதை நிறைவேற்ற கிங்கரர்கள் அந்த கருமியை அழைத்துச்செல்ல ஆயத்தமான வேளையில் ஒரு கிங்கரன் ஓடி வந்தான் ..

''வேந்தே, மன்னிக்க வேண்டும்! இவனது ஆயுள் இன்னமும் முடியவில்லை. தவறுதலாக பிடித்து வந்துவிட்டார்கள் ..'' என்று படபடப்போடு கூறினான்.

''அப்படியானால் இவனை அழைத்துச்சென்று பூலோகத்தில் விட்டுவிடுங்கள் .. ஆயுள் முடிந்ததும் அழைத்து வாருங்கள் ..'' என்றார் எமன்.

கிங்கரர்களும் கருமியை பூவுலகத்தில் கொண்டுவந்து விட்டார்கள். ஆயினும் எமதர்மனின் சபையில் நடந்த யாவும் அவனுக்கு நன்றாக நினைவில் இருந்தது.

தர்மவானின் வீட்டுக்கு வழிகாட்டியதற்காக தனது ஒரு விரலுக்குக் கிடைத்த சொர்க்க வாய்ப்பை நினைத்து வியந்தான்.

தனது முழு உடம்போடும் சொர்க்கம் செல்லும்படியாக இனிமேல் காரியமாற்ற வேண்டும் என்று அக்கணமே உறுதியேற்றான்.

*அதன்படி அவன் திருந்தி கருமித்தனத்தை விட்டொழித்து தான தருமங்களில் இறங்கினான் என்று நினைக்கிறீர்களா நேயர்களே,*

*அதுதான் இல்லை.*

*தர்மவான்களின் வீடுகளைத் தேடிவருகின்றவர்களுக்கு தனது உடம்பு முழுவதையும் அசைத்து, நன்றாக ஆட்டி ஆட்டி வழி காட்டினான்.*


*இது எப்படியிருக்கு! ..*

# திருக்குறிப்புத்தொண்டர் நாயனார்!

ஈசனுக்காகவும், அவரின் அடியார்களுக்காகவும் கண்களையும், உயிரையும் தரும் தொண்டர்கள் வரிசையிலே உதித்தவர் திருக்குறிப்பு நாயனார். காஞ்சிபுரம் வேகவதி ஆற்றிலே துணி துவைத்துக் கொடுப்பவர் இவர். ஒரு சிவனடியாருக்கு இலவசமாக ஆடை வெளுத்துக்கொடுத்த பின்னரே தொழிலை ஆரம்பிப்பது இவரின் நாளாந்த வழக்கம்.


ஒருநாள் அவரால் கடமையை ஆரம்பிக்க முடியாமல் இருந்தது. காரணம், எந்த சிவனடியாரும் அன்று காலையில் ஆற்றங்கரைக்கு வரவில்லை. 'இறைவா, இது என்ன சோதனை..' என்று கண்ணீர் மல்க காத்திருந்தார்..





வெகுநேரத்தின் பின்னர் ஒரு சிவனடியார் அவ்வழியாக வந்தார். பார்த்தாலே பரமானந்தம் கிடைக்கின்ற தோற்றம். பால் வெண்ணீறும், புன்சிரிப்புமாக பிரகாசித்தவரின் ஆடையோ அழுக்காக இருந்தது. புதையலைக் கண்ட ஏழையைப்போல அவரை வணங்கி, ஆடைகளை வாங்கி துவைத்தார் தொண்டர்.

அந்தோ! பெரும் மழையும்,காற்றும் வரவே பெரியவரின் ஆடையை உலர்த்த முடியவில்லை. மாறாக, அது காற்றால் இழுத்துச்செல்லப்பட்டு முட்செடிகளால் கிழிந்தும் போனது. தனது ஒரே ஆடைக்காக குளிரில் நடுங்கியவாறு காத்திருந்த சிவனடியாரை நினைத்து, வேதனை தாளாமல் துணி துவைக்கும் கல்லில் மோதி உயிர்விட எத்தனித்தார். என்னே அதிசயம்! ஆடை தந்தவரே இறைவனாக தோன்றி தடுத்தாட்கொண்டார் தொண்டர்பெருமானை.




வாசிப்பு இன்பத்தில் திளைப்பீர், ஆன்ம பலத்தில் வாழ்வீர்! ..

உ

ஓம் ஸ்ரீராம ஜெயம்

# ஸ்ரீ ரங்கநாதர் பெருமாள் கோவில்

